


பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 1

'இமயவரம்பன்'
நக்கீரன்
தில்லை வில்லாளன்
விசு திருநாவுக்கரசு
முத்து
மு. அண்ணாமலை
கதி. சுந்தரம்
சி. கன்னியப்பன்
இளமைப்பித்தன்
ராம. சுப்பிரமணியன்
வழிப்போக்கன்
நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
தைத் திங்கள் 28-ம் நாள்

விலை அணா 5
10—2—49

மூன்றாவது ஆண்டு

உங்கள் அருமைப் 'பொன்னி'க்கு இன்று மூன்றாம் ஆண்டு தொடங்குகிறது; அன்பர்களின் ஆர்வம், ஒத்துழைப்பு என்னும் துணை கொண்டு இரண்டு ஆண்டுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறாள் 'பொன்னி' நல்லாள். புது ஆண்டில் அத்தகைய ஆதரவும் உதவியும் மிக மிகத் தேவை யென்ற விண்ணப்பத்தோடு 'பொன்னி' மூன்றாவது ஆண்டினைத் தொடங்குகிறாள்.

புதிய ஆண்டுத் தொடக்கம் பல புதிய பகுதிகளோடு சிறப்புற்றிருக்கிறது. நண்பர் தில்லைவில்லாளன் அவர்கள் எழுதிவரும் "துரோகி" புதிய தொடர்கதை; வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கற்பனைச் சித்திரம். தொடர்ந்து, இதழ் தவறாமல், நண்பர்கட்குக் கிடைத்துவரும் இவ்விருந்து.

சிலப்பதிகாரக் காட்சிகள் எனும் தலைப்பில் புலவர் விசு. திருநாவுக்கரசு அவர்கள் தமிழன்னையின் மணியாரமாயிலங்கும் சிலம்புச் செல்வத்தை இலக்கியக் கட்டுரைகளாக வழங்கிவருகிறார்கள். அக் கட்டுரைகளுக்கேற்ற வண்ணப்படங்கள் மேலட்டையில் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன.

கதைப்பாட்டு புதிய பகுதி. நண்பர் மு. அண்ணாமலை அவர்களின் எரிமலை தணிந்தது என்ற பாடல் இப்பகுதியைத் தொடங்கிவைக்கிறது. ஒரு சிறு நிகழ்ச்சி, கவிதை வடிவம் பெற்றிருக்கிறது. தொடர்ந்து நம் இளங்கவிஞர்கள் இப்பகுதியில் எழுதிவருவார்கள்.

தோழர் இளமைப்பித்தன் அவர்களின் சிறுகதை ஒன்றும், மற்றும் "கண்திறக்குமா?" தொடர்கதையும், செய்திப்பாட்டும், சிறுவர் அரங்கம், கலையுலகம், பகுதிகளும் இடம்பெற்றிருக்கின்றன.

வம்பு மடம் செய்திச் சித்திரம்; நகைச்சுவைப் பகுதி. உயர்திரு உல்லாசம் அவர்கட்கு வழிப்போக்கன் எழுதும் கடிதங்கள் உல்லாசங்களின் ஒய்யார வாழ்விற்குச் சரியான சவுக்கடிகளாகும். மற்றும் வேடிக்கைச் சித்திரங்கள், செய்திப் படங்கள் (கார்ட்டூன்கள்) கருத்துக்கு விருந்தாய் அமைவன. பிற பகுதிகள் அடுத்த அடுத்த இதழ்களில் தொடங்கவிருக்கின்றன. எனவே அன்பர்கள் 'பொன்னி' நல்லாளிடமிருந்து தொடங்கியுள்ள ஆண்டில் நிறைவான கலைத்தொண்டினை எதிர்பார்க்கலாம்.

நம் இதழ் வளர்ச்சிக்கு ஊன்று கோலாய் விளங்குபவர்கள் விற்பனை
யாளர்கள். அவர்களின் இடையறாத பணிதான் 'பொன்னி'யின் இந்நாள்
மேல் நிலைக்குக் காரணமாகும். சிறப்பாகக் கோவை எஸ் மீனாட்சிசுந்தரம்,
சென்னை G. N. சாமி, கும்பகோணம் ஆர். பி. கிருஷ்ணன், திருச்சி A. சண்முகம்
ஆகியோரை இங்கே குறிப்பிட்டுத்தாக வேண்டும். இவர்கட்கும், மற்
றும் நமக்கு எல்லா வழிகளிலும் உதவிவரும் அனைவருக்கும் நம உளங்
கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்திப்பாட்டு

நீதி - புதைகுழியில்!

மறுவுயர்ந்து, திருவழிந்த நாட்டில், அண்ணா
மலைஅரசர் மாண்புமிகு கழகந் தன்னில்
இருசாரார் மாணவர்கள் கட்சிப்பேரால்
எழுந்தொரு பூசலிலே கைகலந்தார்.
வருவித்த அரசியலார் வந்துநின்று
மாணவரில் பலபேரைக் கைதுசெய்தார்.
ஒருசாரார் சிலநாளில் விடப்பட்டார்கள்;
உலரயாத காரணத்தை உரைக்கச்சொன்னோம்!

இருக்கின்றார் திராவிடரின் இயக்கந் தன்னில்
என்பதற்கே சிலரைப்போய்த் தண்டிப்பீரேல்
ஒருநாளும் அடுக்காதே என்றுரைத்தோம்.
உருப்படுமா நீதியென்றும் கேட்டுப் பார்த்தோம்,
இருசாரார் போராட்டம்; எழுந்த குற்றம்
இருசாரார் தம்மாலும் எழுந்ததாகும்!
கருணைமிகு அரசியலார் கேட்கவில்லை
கடிதான அபராதம் சிலர்க்கே தந்தார்!

காங்கிரஸின் பேர்சொன்னால் குற்றம்போச்சா?
காந்தியார் திருச்சபையின் நியாயம் ஈதா?
தீங்கிற்குத் தண்டனையா? அன்றேல்இங்கே
திராவிடர்கள் என்பதற்கா? என்றுகேட்டோம்!
ஓங்குகின்ற அறமன்றம் கூட்டிவந்தே
ஓங்காத நியாயத்தைத் தாங்கவைத்து
வாங்காமல் செல்வோர்க்குச் சிறையைக்காட்டி
வாட்டுகின்றார் பொதுமக்கள் அரசாங்கத்தில்!

"எதுநீதி! எதுநீதி!" என்று நாட்டார்
ஏங்குகிற வேளையிலே இதுவாசேதி!
சதுப்புநிலந் தன்னிற்போய் மணலைத்தேடிச்
சலித்துவிட்ட கதைதானா? நீதிதன்னை
மெதுவாகக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு
மேலிருந்து காங்கிரசார் ஆள்தல்கண்டும்
இதுநன்றோ எனக்கேட்க ஆட்களில்லை!
ஏனிந்தப் பொதுமக்கள் வாயடைத்தார்?

'இமயவரம்பன்'



வீரர் சிதம்பரம் நினைவு

தூத்துக்குடித் துறைமுகத்தினின்றும் வீரர் சிதம்பரனாரின் திருப்பெயர் கொண்ட கப்பல் ஓடத்தொடங்கி விட்டது. டில்லியினின்றும் இவ்வெள்ளோட்ட விழாவை நிகழ்த்துவதற்கென்று இந்திய கவர்னர் ஜெனரல் தென்னாட்டுக்கு வந்து விழாவைச் சிறப்புற முடித்துத் தந்திருக்கிறார். சென்னை அமைச்சர் குழுவும், தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களும் இம் முயற்சியில் முன்னின்று வெற்றியாக்கித் தந்துள்ளனர்.




தமிழ் மக்களின் மதிப்புக்குரிய பெருந்தகை, கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார்; நாற்பது ஆண்டுகட்கு முன்பே, பிரிட்டிஷ் ஆட்சி நிலவும் நாளில், கடல் வாணிப உரிமைதமிழருக்கு வேண்டுமென்ற கருத்தோடு, அயலவர் ஆட்சியின் ஆணி வேரைத் தகர்க்கும் வழி அதுதான்

என்ற எண்ணத்தோடு, சுதேசிக் கப்பல் கம்பெனி யொன்று தொடங்கி, வெள்ளைக் கம்பெனிகளோடு போட்டியிட்ட வீரம் சிதம்பரனார்க்கே உரியது. அத்தகைய திறம் கடல் வாணிபச் சிறப்பும், கடல் கடந்து வெற்றி கொண்ட பெருமையும் உரிய தமிழகத்தில் தோன்றிய வ. உ. சி. யிடம் அரும்பியதில் வியப்பில்லை. ஆனால் அந்நாள் ஆட்சியினர் சிதம்பரனார் எண்ணத்தை ஈடேற முடியாதபடி செய்துவிட்டனர். நாட்டுப் பற்றுக் கொண்டு, வெற்றி வழியில் நாட்டம் செலுத்திய மறவருக்குச் சிறைச்சாலை வாழ்வும் செக்கிழுக்கும் பணியும் தந்தனர். இந்திய உரிமைப்போர் வரலாற்றில் இணையற்ற சிறப்போடு இடம் பெறவேண்டியவர் சிதம்பரனார்.

ஆனால் இந்தியாவும், தமிழகமும் அவருக்குரிய சிறப்பிடத்தை இன்று வரை அளிக்கத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும். இன்று ஒரு கப்பல் அவர் பெயரால் கடலில் செல்லுகிற தென்றால் அது மிகமிகக் காலங் கடந்து நிகழுமொரு திருப்பணியாகும். "ஜலஉஷா" "ஜலஜவஹர்" கடலிலே மிதந்த பின்னர்தான், தென்னாடு "எங்கே எங்கள் சிதம்பரம் பெயரில் ஒரு கப்பல்?" என்று எண்ணற்ற கூட்டங்களில், பத்திரிகைகளில் கேட்ட பிறகுதான் "சிதம்பரனார் பெயர் மறைக்கப்படுவதேன்?" என்று திராவிடர் கழகம் நாடெங்கும் கேள்வி யெழுப்பிய பிற்பாடுதான், தூத்துக்குடியிலே இச் சிதம்பரம் கப்பல் இன்று மிதக்கிறது. காங்கிரஸ் கட்சி இந்திய நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை முற்றும் தன்னிடம் வைத்துள்ள நாட்களிலும், எதிர்க்கட்சியினர் நினைவூட்டிய பின்னர் தான், காங்கிரஸின் பெயரால் அல்லற்பட்ட, வாழ்க்கையையே வரண்ட பாலைவனமாக ஆக்கிக்கொண்ட ஒரு தன்னலமற்ற தியாகிக்கு நினைவுக்குறி ஏற்படுகிறது! தலைமையிடம் முன்வந்து செய்யவேண்டிய ஒரு பணி, பொது மக்களின் கிளர்ச்சிக்குப் பிறகு, காலங்கடந்து நடைபெற்றிருக்கிறது.

என்றாலும், காங்கிரஸ்காரர்களே முயன்று கப்பல் கம்பெனியொன்று நிறுவி, அக்கம்பெனிக்குச் சென்னை அரசினர் பணஉதவியும் செய்து, அக்கப்பல் வெள்ளோட்டம் இந்திய கவர்னர் ஜெனரலால் நிகழ்ந்திருப்பது பெருமைப்படத்தக்கதுதான். இப்பணியில் முற்பட்ட தோழர் வீரபாகு முதலியோருக்குத் தமிழர்களின் பாராட்டு என்றும் உண்டு.

இப்புதிய கப்பல் தன் பணியைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென விரும்புவதோடு, தென்னாடு முப்பாங்கும் கடல் சூழ்ந்த நாடு என்பதை நம்மவர்கள் நன்கு உணர்ந்து கொண்டு, முன்னாள் நம் முன்னோர்கள் கடற்படை, கடல் வாணிபம் இவற்றில் பெற்றிருந்த சிறப்பிடத்தை மீண்டும் நாம் அடைய வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம். அத்தகைய சிறப்பு தென்னாட்டு விடுதலையில் தான் மலரும் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.



"சென்னை சர்க்கார் வட இந்திய ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டதல்ல" என்று கோவையில் கூட்டமொன்றில் பேசும்போது தோழர் காமராஜ் குறிப்பிட்டுள்ளார்.

காலமும் கருத்தும்

இந்து அறநிலைய மசோதா

இந்து அறநிலையங்களைத் தம் நேர்பார்வையில் கொண்டு வருவதற்காகச் சென்னை அரசினர் ஒரு மசோதாக் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டசபையில் இம் மசோதா பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன; பத்திரிகைகளில் ஆதரவுக் கட்டுரைகளும் எதிர்ப்புக் கட்டுரைகளும் வெளியான வண்ணம் இருக்கின்றன. சத்தியாநந்த சரஸ்வதி என்றொரு சாமி இம் மசோதாவை எதிர்த்துப் பட்டினி கிடக்கிறது. தேசியப்பத்திரிகைகள் எந்தச் செய்தியை மறந்தாலும், இப்பட்டினிச் சாமியைப்பற்றிய செய்திகளைப் பூதக்கண்ணாடி வைத்துப் பெரிதாக்கி வெளியிடுகின்றன. வக்கில்கள் சங்கமெல்லாம் மசோதாவை எதிர்த்துக் கச்சைகட்டுகின்றன. சட்டநிபுணர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கைதந்து கொண்டிருக்கிறார்கள். ஆக இம் மசோதா மிகப் பிரபலமாகியிருக்கிறது. நம் முதலமைச்சர் ஓமந்தூராரும், இம் மசோதாவைச் சட்டசபையில் முன்மொழிந்த டாக்டர் ராஜனும் இம்மசோதாவின் அவசியத்தை மிக நன்றாக விளக்கியிருக்கிறார்கள்; சமயத்தின் பெயரால் நடைபெறும் அறநிலையங்களில் நடைபெறும் அக்கிரமங்கட்கு அளவில்லையென்பது அனைவரும் அறிந்ததே. 'மடங்களும் பண்டாரசன்னிதிகளும்' என்றாலே பக்தி நினைப்பு யாருக்கும் வருவதற்கில்லை; அவர்களின் கோலாகலவாழ்க்கைத்தான் மக்களின் நினைப்பில் நிழலாடுகின்றது. இந்த அட்டகாசத்தை, சமயத்தின் பெயரால் பொதுப் பணத்தை ஏப்பமிடும் பித்தலாட்டத்தை நிறுத்தவேண்டும்; அறநிலையங்களின் நிர்வாகத்தில் தலையிட அரசினருக்கு அதிகாரமிருந்தால்தான் ஒழுங்குமுறை ஏற்பட முடியும். அந்த நோக்கத்தில் கொண்டு வரப்படும் இம்மசோதாவை நாம் முழுமனத்தோடு வரவேற்கிறோம்; பொதுமக்களும் வரவேற்கிறார்கள். சில தன்னலக்காரர்கள் போடும் பெரியகூச்சலுக்காக ஓமந்தூரார் இம்முயற்சியில் பின் வாங்கிவிடக் கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்டாலின் சமரசம்


ஸ்டாலின் ட்ரூமன் சந்திப்பு நிகழுமென்று உலகமே எதிர்பார்த்தது; அந்த எண்ணத்தில் மண் விழும்படியாக ட்ரூமன் கைவிரித்துவிட்டார். ஐக்கிய நாடுகள் சபை என்று ஒன்றிருக்கும்போது, அதன் மூலம் தான் எல்லாப் பிரச்னைகளும் தீர்க்கப்பட வேண்டுமென்று காரணம் காட்டித் தம்மைச் சந்திக்க முன்வந்த ஸ்டாலின் வேண்டுகோளை மறுத்துவிட்டது நியாயமற்றதாகும். ஐ. நா. சபை என்பது ட்ரூமன் — ஸ்டாலின் சபைதானே! அது யாருக்கும் தெரியாததல்லவே! இத்தனை பேரையும் கூட்டிவைத்து அச்சபை இரண்டு பெரும் பிரிவுக்குள்தானே எப்போதும் அடங்கிவிடுவது வழக்கமாயிருந்து வருகிறது! மற்ற நாடுகளெல்லாம் 'பின்பற்றும் நாடுகளா'கத்தானே இருந்து வருகின்றன. கொள்கை வகுப்பவர்கள் ஸ்டாலினும் - ட்ரூமனுமாகத்தானே இருந்து வந்திருக்கிறார்கள்! இப்படி இரண்டு பேருமாக ஐ. நா.



சபை மூலம் இதுவரை தீர்க்க முடியாத சிக்கல்களைத் தனிப்பட்ட சந்திப்பின் மூலம் தீர்த்துக்கொள்வது எளிதாக இருக்கலாமல்லவா? அமெரிக்கா, ரஷ்யா என்ற இரண்டு வல்லரசுகளின் ஒத்துழைப்புத்தான் உலக அமைதியை நிலவச் செய்ய முடியும். மற்ற நாடுகள் எத்தனை அமைதி விருப்பம் காட்டினும், அந்த வல்லரசுகளின் ஆதரவில்லாவிட்டால் பயனில்லை, எனவே ட்ருமன் - ஸ்டாலின் சந்திப்பு நிகழ்வதற்கான சூழ்நிலை மறுபடியும் ஏற்படுமென எதிர்பார்ப்போமாக.

ஆதிக்க வெறி

சென்ற உலகப் போர் கற்பித்த பாடத்தை இன்னும் டச்சுக்காரர்கள் உணர்ந்தபாடில்லை; இந்தோனேஷ்யாவில் அவர்கள் மேற்கொண்டுள்ள ஆதிக்கப் போக்கு சரிந்து தரைமட்டமாகும் நாள் விரைவில் வந்தே தீரும் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஐ. நா தீர்மானத்தையும் மீறி அவர்கள் போரிட்டு வருவதும், குடியரசுத் தலைவர்களை விடுவிக்காமல் வைத்திருப்பதும் உலக நாடுகளையே அவமதிக்கும் செயல்களாகும். டச்சுக்காரர்கள் இந்த விளையாட்டின் பயனை அனுபவிக்க வேண்டியவர்களாகிறார்கள்; முன் கூட்டியே ஒதுங்கிவிடுவது புத்திசாலித்தனமாகும். அதுதான் கால மாறுதலை அவர்கள் உணர்ந்து கொண்டதற்குத் தக்க அறிகுறியாகும்.



சியாங்கே ஷேக் தாம் சரண்புகுவதற்கு நாடு ஒன்றைத் தேடுகிறார், உலகப் படத்தில்!



நடந்த கதை

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா?" என்ற கேள்வியுடன் தன் 'கதை'யைச் சொல்கிறான்.

சட்டப் பரீட்சையில் தேறிய சந்திரமோகன் பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில், ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் என்பதற்காகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் அந்தக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டதன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் பள்ளித்தோழனைக் கண்டு ஆறுதலடைகிறான்.

ஒருநாள் பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி எதிர்பாராத விதமாகச் சந்திரமோகனை ஆஸ்பத்திரியில் சந்தித்து "என்னை மறவாதீர்!" என்று கேட்டுக் கொள்ளுகிறாள்.

இதற்கு மத்தியில் சந்திரமோகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான அவன் தங்கை பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணாவின் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா, தாயார் இறந்ததைப் பற்றி மட்டும் தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர, தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப் பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும், நேரே சென்னைக்கு வருகிறான். தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டதும் அன்றிரவைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டிலாவது கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் அவன் அவருடைய வீட்டை நோக்கி நடக்கிறான். அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான பாரிஸ்டர் அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

பரிமளா தன் மாமாவின் மகனான சிவகுமாரனால் விரசமாக நடத்தப்படுகிறாள் என்ற செய்தி, சாந்தினி வாயிலாகச் சந்திரமோகனின் காதில் விழுகிறது. உடனே தஞ்சைக்குச் செல்கிறான் வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது. அப்பொழுதுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் செங்கமலம் காட்சியளிக்கிறாள். செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன், அவளையும் அவள் தாயாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தன் மாமாவின் கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன் நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியின்றி அவன் அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

வழியில் செங்கமலத்தின் தாயார் ஊர் வாயை அடைப்பதற்காகத் தன் மகளுக்குத் தானே தாலியைக்கட்டி வைக்கிறாள். அதைக்கண்டு வியந்த சந்திரமோகனுக்கு அவள் தன் கதையைச் சொல்கிறாள். தான் ஏற்கனவே கல்யாணம் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணரைக் காதலித்து மணந்ததாகவும், அவர் இறந்தபிறகு தான் 'சூத்திரச்சி' என்பதற்காக அவருடைய சொத்தில் தனக்கு ஒன்றும் பங்கு கிடைக்கவில்லை என்றும் அதன் பயனாகத் தானும் தன் மகளும் நாதியற்று நிற்க நேர்ந்ததாகவும் அவள் கூறுகிறாள்.

செங்கமலம், அவளுடைய தாயார், சந்திரமோகன் ஆகிய மூவரும் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது, எதிர்பாராத விதமாக அங்கு வந்திருந்த பாஸ்கரன் செங்கமலத்தின் தாயாரைக் கண்டதும், 'சித்தி' என்கிறான். இதிலிருந்து செங்க

மலத்தின் தாயாரைக் காதலித்து மணந்த பிராமணனின் மகன் பாஸ்கரன் என்று தெரியவருகிறது.

சந்திரமோகன் வருவதற்கு முன்னால் பாரிஸ்டரின் உதவியால் அவனுடைய வீடு காலிசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. பரிமளாவும வந்திருக்கிறாள். அவள் அண்ணாவைக்கண்டதும், "இன்னொருமுறை நீ தேசத்துக்காகச் சிறைசெல்வதா யிருந்தால் எனக்கு ஒரு துளி நல்ல விஷமாகப் பார்த்து வாங்கிக்கொண்டுவந்து கொடுத்துவிடு!" என்று கேட்டுக்கொள்கிறாள்.

ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகச் சந்திரமோகன் வக்கீல் தொழிலை மேற்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, அவன் 'தினபந்து' என்னும் ஒரு பத்திரிகையை. ஆரம்பிக்கத் திட்டம் போடுகிறான். அதற்காகத் தன் வீட்டை அடமானம் வைத்துப் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்குகிறான்.

நாளடைவில் சந்திரமோகனுக்கும் சாந்தினிக்கும் இடையே உதித்த காதல் வளர்ந்து வருகிறது ஒருநாள் சாந்தினி தன் 'டயரி' களை மறந்து வீட்டில் வைத்துவிடுகிறாள். அவற்றைப்பார்த்த பாரிஸ்டருக்கு எல்லா விஷயமும் தெரிந்து விடுகிறது. 'உங்களுடைய காதலுக்குக் குறுக்கே நிற்க நான் விரும்ப வில்லை' என்று அவர் சந்திரமோகனிடம் சொல்லி விடுகிறார்.

வெளியே சென்றிருந்த சந்திரமோகன் ஒருநாள் வீடு திரும்பும் போது, தன் வீட்டில் யாரோ முன்பின் அறியாத ஒருவன் வந்து பரிமளாவுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிடுகிறான். கடைசியில், அவன் தஞ்சையிலிருந்து தன்னந்தனியாக வந்த பரிமளாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவன் என்று தெரிகிறது. அவனுக்கே பரிமளாவைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டால் என்ன என்று சந்திரமோகனுக்குத் தோன்றுகிறது.

இதற்கிடையில் 'சூத்திரச்சி' என்பதற்காக நீதிமன்றம் வழங்காத நீதியைப் பாஸ்கரன் செங்கமலத்திற்கும் அவள் தாயாருக்கும் வழங்குகிறான். தன்னுடைய சொத்தில் பாதியைப் பகிர்ந்து அவர்களுக்குக் கொடுப்பதோடு, அவன் தான் அதுவரை அணிந்திருந்த பூணூலைக் கழற்றி எறிந்து ஆரிய வஞ்சக வாழ்விலிருந்து விடுதலைபெறுகிறான்.

இந்தச் சமயத்தில்தான் தான் கற்பழிக்க முயன்ற ஒருத்தியால் சிவகுமாரன் குத்திக் கொல்லப்பட்டான் என்ற செய்தி பத்திரிகையில் வெளியாகிறது. சந்திரமோகனும் பரிமளாவும் அவனுக்கென்று ஒரு முழுக்குப் போட்டு வைக்கின்றனர்

சிவகுமாரனுக்கு நேர்ந்த கதியைக் குறித்துச் செங்கமலம் கண்ணீர் வடிக்கிறாள். அத்துடன் நில்லாமல் அவனுக்காகத் தன் அன்னை கட்டிய தாலியையும் அறுத்தெறிகிறாள்

இந்தச் சமயத்தில் பரிமளாவைப் பார்த்துவிட்டுப் போக மணவாளனின் தாயாரும் தகப்பனும் வருகிறார்கள்.

இருபதாம் அத்தியாயம்

அன்னையின் நினைவு

நான் பார்த்திருக்கிறேன், நீங்களும் பார்த்திருக்கலாம் — சில சமயம் நமக்குப் படித்தவர்களை விட, பாமரர்கள் பகுத்தறிவுள்ளவர்களாகத் தோன்றுகிறார்கள். தீர்க்கதரிசனத்துக்குப் பெரிய பெரிய ராஜ தந்திரிகள்கூட அவர்களிடம் பிச்சை யெடுக்கவேண்டும்போலிருக்கிறது. மணவாளனைப்பற்றி அவனுடைய தாயாரும் தந்தையும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தபோது, எனக்கு அப்படித்தான் தோன்றிற்று.

பரிமளாவை அவர்களுக்குப் பிடித்திருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; பிடித்திராவிட்டால்தான் ஆச்சரியமாயிருந்திருக்கும். வெளி அழகோடு உள்ளழகும் அவளிடம் பொருந்தியிருந்தது. ஆசைக் கனவுகள் பல கண்டு, ஆகாசத்தில் மிதந்துகொண்டிருக்கக் கூடிய அந்தச் சின்னஞ் சிறு வயதிலேயே அவள் போதுமான அளவு உலக அறிவு பெற்றிருந்தாள். குடித்தனப் பொறுப்பையும் வேண்டிய மட்டும் உணர்ந்திருந்தாள். காதலைப்

பற்றி அவள் கொண்டிருந்த அபிப்பிராயம் இலக்கியத்துக்கு ஒத்ததா யில்லாமலிருக்கலாம்; ஆனால் வாழ்க்கைக்கு ஒத்ததா யிருந்தது. அனுபவமில்லாமலே அவள் அந்த விஷயத்தில் தன் அறிவைக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்திருந்தது எனக்கு வியப்பாயிருந்தாலும் விரும்பத் தக்கதாயுமிருந்தது. அதைப்பற்றி அவளைப்பார்க்க வந்திருந்தவர்களிடம் நான் வேடிக்கையாகத் தெரிவித்தேன். அவர்களும் அதை வெகுவாக அனுபவித்து அவளைப் பாராட்டினார்கள்.

கல்யாண வியாபாரத்துக்கு வேண்டிய பேரமெல்லாம் ஒருவாறு பேசி முடிந்த பிறகு, "பெண் எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறாள். அத்துடன் நீங்கள் சொல்வதிலிருந்து புத்திசாலியாகவும் இருப்பாள் என்று தோன்றுகிறது. ஆனால் பிள்ளையாண்டான் அவளுக்கு ஏற்றபடி இருக்க வேண்டுமே என்றுதான் எங்களுக்குக் கவலையா யிருக்கிறது!" என்றாள் மணவாளனின் தாயார்.

இதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எங்குமே பெற்றோர் தங்கள் பிள்ளையைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதுதான் வழக்கம். அதற்கு விரோதமாக வல்லவா இவர்கள் பேசுகிறார்கள்?

இருந்தாலும் என்னுடைய வியப்பை நான் வெளியே காட்டிக்கொள்ளாமல், "ஏன், பிள்ளையாண்டானுக்கு என்ன?" என்று கேட்டேன்.

"பிள்ளையாண்டான் என்னமோ நல்லவன்தான்; ஆனால் கொஞ்ச நாட்களாக அவன் நடந்துகொள்ளும் விதம் எங்களுக்குப் பிடிக்கவில்லை."

"ஏன், ஏதாவது தவறான வழியில்........."

"ஆமாம், அது என்னவோ எங்களுக்குத் தவறான வழியாகத்தான் படுகிறது. ஆனால், அவனோ அதுதான் நல்லவழி என்று சாதிக்கிறான்."

"அது என்ன வழி?"

"அதுதான்—காங்கிரஸ், காங்கின்னு கொஞ்ச நாட்களாக எங்கே பார்த்தாலும் அடிபடுகிறதே, அந்த வழிதான்!"

"இதுதானா! நான் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன். ஏன், அது நல்ல வழிதானே?"

"நல்ல வழியுமாச்சு, கெட்ட வழியுமாச்சு, போங்கள்! யாராவது தான் சாக மருந்து தின்பார்களா?—எனக்கென்னவோ இந்தக் காங்கிரஸ் கீங்கிரஸ் எல்லாம் ஏதோ காரியார்த்தமாகத்தான் நடக்கிறது என்று தோன்றுகிறது!"

"காரியமில்லாமல் எதுதான் நடக்கும்? வெள்ளைக்காரனிடமிருந்து நம்முடைய தேசம் விடுதலையடைய வேண்டுமென்றுதான் காங்கிரஸ் நடக்கிறது!"

"விடுதலையடையா விட்டால் என்ன?"

"நாம் அன்னியனுக்கு அடிமையா யிருப்போம்."

"விடுதலையடைந்துவிட்டால் நம் ஊரானுக்கே நாம் அடிமையா யிருப்போம் — அவ்வளவுதானே?"

"அப்படிச் சொல்லிவிட முடியுமா? இப்பொழுது நம்முடைய பணத்தையெல்லாம் வெள்ளைக்காரன் கொள்ளையடித்துக்கொண்டு போகிருன். இதனுல் நாம் எவ்வளவோ கஷ்டத்துக்கு உள்ளாகிறோம். தேசம் விடுதலையடைந்துவிட்டால்................."

"நம் ஊரானே நம்முடைய பணத்தைக் கொள்ளையடிப்பான்! — ரொம்ப அழகுதான் போங்கள்! விடுதலையாவது, வேடிக்கையாவது! ராமன ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் அரசாங்கம் அரசாங்கம்தான்!— அதற்கு ஓரளவு கட்டுப்பட்டு நாம் நாலுபேரைப் போல நன்ருக வாழ்வதற்கு வழி என்ன என்று பார்க்க வேண்டுமே தவிர, இதெல்லாம் என்ன பிதற்றல்?"

"என்ன, நீங்கள் ஒரேயடியாக இப்படிப்பேசுகிறீர்களே!"

"அப்படியானுல் நீங்களும் எங்கள் பிள்ளையாண்டானுடைய கட்சியில் சேர்ந்தவர் போலிருக்கிறது! என்ன கட்சி வேண்டியிருக்கிறது, போங்கள். வீட்டை வாசலைப் பார்த்துக் கொண்டு, மாடு கன்றைப் பார்த்துக்கொண்டு, பயிர் பச்சையைப் பார்த்துக்கொண்டு இருக்காமல் கட்சியும கிட்சியும்! —காலில் கொட்டிய தேளை அடித்துப் போட்டுவிட்டு வருகிருன் — அவன் அஹிம்சையைப் பற்றிப் பேசுகிருன்; உயிரோடுஇருக்கும் பாட்டி செத்து விட்டாள் என்று சொல்லி ஆபீஸில் லீவு கேட்டுக்கொணடு வருகிருன் அவன் சத்தியத்தை பற்றிப்பேசுகிருன்! இதெல்லாம் வேடிக்கையா யில்லையா? சத்தியம், அஹிம்ஸை — இதைப் பற்றியெல்லாம் அழகாக எழுதி, அழகாகப் புத்தகம் போட்டு, அழகாக அலமாரியில் வைத்துக்கொள்ளலாம். பொழுது போகாத நேரத்தில் எடுத்து வைத்துக் கொண்டும் படிக்கலாம். இல்லை, ஓரிரண்டு பேர் செலவுக்குக் காசு கொடுக்கும் சரியான ஆசாமியைப் பிடித்து வைத்துக் கொண்டு, அந்தச் சத்தியத்தைப் பற்றியும் அஹிம்ஸையைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கலாம். ஏன், வாழ்க்கையில் வேறு தொல்லையொன்றும் இல்லாவிட்டால் அதன்படி நடக்கவும் நடக்கலாம். 'முடியாது' என்று நான்சொல்லவில்லை. அப்படியே எல்லோரும் நடந்து விடுவார்கள என்று கனவு கண்டால் அது பலிக்குமா? — என்னுடைய புத்திக்கு ஒன்றும் எட்டவில்லை!"

"அபபடிச் சொல்லுங்கள் — உங்களுடைய புத்திக்கு அது எட்டவில்லை; அவ்வளவுதான் விஷயம்!"

"எட்டினுல் எட்டுகிறது, எட்டாவிட்டால் போகிறது — எங்களுக்கு அதெல்லாம் வேண்டாம். அந்தப் பிள்ளையாண்டானுக்கு நாங்கள் எங்களாலானமட்டும் சொல்லிப் பார்த்துவிட்டோம்; அவன் கேட்கவில்லை. எப்பொழுது பார்த்தாலும காங்கிரஸ், காங்கிரஸ் என்னு உருப்போட்டுக் கொண்டு இருக்கிருன். இருக்கிற வேலையையெல்லாம் விட்டுவிட்டுக் கைராட்டை சுற்றுகிருன். என்னவோ கதாராம கதர் — அதை வாங்கிக் கட்டிக் கொள்கிருன். 'பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு விடுமா?' என்கிருர்

களே, அந்த மாதிரி, இவன் கதர் கட்டிக் கொண்டானே இல்லையோ — உடனே உலகத்திலுள்ள மில்களையெல்லாம் மூடிவிட வேண்டியதுதான்! அந்த மில்களில் வேலை செய்து கொண்டிருப்பவர்களெல்லாம் இவனுடைய வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கெல்லாம் இவன் சாப்பாடு போடுவானுக்கும்! — இந்த மாதிரி பைத்தியம் பிடித்து அலைகிறுன், அவன்! பரிமளா வந்தபிறகாவது அவனுடைய பைத்தியம் தெளியுமோ, என்னவோ!"

இவ்வாறு சொல்லி நிறுத்தியதுதான் தாமதம்; அதுவரை அங்கே உட்கார்ந்து அந்த அம்மாளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பாரிஸ்டர் பரந்தாமன், அவருடைய இளையாள், சாந்தினி அனைவரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டனர். பரிமளாவும் அறைக்குள்ளிருந்தபடியே 'களுக்'கென்று சிரித்து விட்டாள். நல்லவேளையாக மணவாளன் அன்று அவர்களுடன் வந்திருக்கவில்லை.

எனக்கு என்னவோ போல் இருந்தது. பரிமளா உள்பட அங்கிருந்தவர்களெல்லாம் அந்த அம்மாளுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள். நான் ஒருவன்தான் தனி. சாந்தினி என்னுடைய கொள்கையில் ஓரளவு அனுதாபம் உள்ளவளானாலும் அத்தனை பேருக்கு மத்தியில் அவள் என்னை ஆதரித்துப் பேசத் துணியவில்லை. ஆகவே, நான் ஒரு அசட்டுச் சிரிப்புடன் பேசாமல் இருந்து விட்டேன்.

"உங்களுடைய பிள்ளையாண்டானைப் பற்றி இனிமேல் நீங்கள் கவலைப்படவேண்டாம். பரிமளா அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டிய விதத்தில் பார்த்துக் கொள்வாள்!" என்றுர் பாரிஸ்டர் பரந்தாமன்.

"அதைத்தான் நாங்களும் சொல்கிறேம். அவள்தான் அவனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லி நல்ல வழிக்குத் திருப்ப வேண்டும். நாங்கள் என்னமோ அவர்களுடன் இருக்கப் போவதில்லை; கிராமத்திலேயேதான் இருந்துவிடப் போகிறேம். அவர்கள் இருவரையும் பட்டணத்திலேயே தனிக் குடித்தனம் வைத்து விடப் போகிறேம். எப்படியோ அவர்கள் இருவரும் நன்றுயிருந்தால் சரி!"

"ஏன், இவர்களையும் கிராமத்திலேயே வைத்துக் கொள்வதுதானே?"

"அவனுக்குத்தான் கிராமமும் பிடிக்கவில்லை, கிராமவேலையும் பிடிக்க வில்லையே!"

"இது என்ன, கூத்து! காங்கிரஸ்காரனுக்குக் கிராமம் பிடிக்கவில்லை யென்றுல் வேடிக்கையா யிருக்கிறதே!"

"அவனே ஒரு வேடிக்கையான காங்கிரஸ்காரன்தானே! மேலும் பட்டணத்தில் அவன் ஏதோ வேலையாயிருக்கிறுன்..."

"அடடா! மறந்தே போனேமே! அவன் என்ன வேலையாயிருக்கிறுன்?"

"ஏதோ ஒரு பத்திரிகை ஆபீஸில் உதவியாசிரியனுக இருக்கிறுனும்!"

"சரிதான்; அந்த வேலையில் இருந்தால் அவனுடைய பைத்தியம் நாளுக்கு நாள் முற்றத்தான் போகிறது!"

வம்பு மடம்

— ஆண்டி —

கும்பகோணத்தில் ஒரு அம்மையார் யானையிடம் 'பக்தி'காட்டச் செல்ல, அந்த 'யானை தேவர்' தன் குணத்தை வாலால் காட்ட, அம்மையார் படுகாய முற்றுர்களாம். கல்லிடைக் குரிச்சியில் உச்சயினி காளி கோவிலில் பத்து நாள் தவமிருந்தும் காளி பிரசன்னமாகி வரந்தராததைக் கண்டு, பக்தனொருவன் தன் அடிவயிற்றில் கத்தியால் குத்திக் கொண்டு, மாண்டானும். இந்த இரண்டு செய்திகளும் "கலி காலத்தில் பக்தர்கள் படும் பாட்டை விளக்குகிற"தென்று சொல்லிக் கொண்டே வந்தார் என் பழங்கால நண்பர்; அவருக்கு முன்பே இச் செய்திகளைப் பார்த்திருந்த என் மாணவத் தோழர் "மூடநம்பிக்கையால் வரும் கேடுகள் இவை" என்று சுருக்கமாக விளக்கினர். வயதானவர் பதில் பேசவில்லை.

வயதான மனிதர்களைப் போலச் சில வயதான செயல்களும் நாட்டில் நடைபெறுகின்றன; தேவகோட்டை நகர சபையார் மந்திரி கூர்மையாவுக்குப் பனையோலையில் அச்சடித்த வரவேற்பைப் படித்தளித்தார்களாம்; எப்படிக் காலம் முன்னேறுகிறது பார்த்தீர்களா? தாளுக்குப் பதில் பனையோலை கிடைத்திருக்கும் போது, அச்சடிப்பதற்குப் பதில் எழுத்தாணி கொண்டு பொறித்திருப்பது தான் பொருத்தமாகும்! அடுத்தபடியாக அங்கே 'விஜயம்' செய்யும் மந்திரியார் விஷயத்திலாவது இந்தப் பொருத்தம் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம்!

வரவேற்பென்னும் போது நம் கவர்னர் ஜெனரலை இத்தடவை வரவேற்பதற்காக, சென்னை அரசினர் மறக்காமல் தோழர் காமராஜரையும், அவருக்காக மற்ற காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள், காரியதரிசிகளையும் அழைத்திருந்தது நம் நினைவிற்கு வருகிறது. இதிலிருந்து ஓமாந்தூரார் பழைய தவறுதலை மீண்டும் செய்வதில்லை என்பதில் பிடிவாதம் காட்டுகிறர் 'என்றும் தெரிந்தது. ஆனல் கவர்னர் ஜெனரலோ, 24-மணி நேரம் முன்னதாகவே வந்து சென்னை சர்க்கார் 'வரவேற்பு ஏற்பாட்டினை'த் தலை குப்புறக் கவிழ்த்து விடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை; சென்ற தடவைக்கும் சேர்த்து இரண்டு மாலையோடு காத்திருந்த காமராஜருக்கு, இத்தடவையும் அப்பேறு கிட்டாததைக் குறித்து நம் மனப்பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவர்னர் ஜெனரல் சென்னைக்கு இத்தடவை வந்திருப்பது கப்பலோட்டிய தமிழரின் பெயரால் ஒரு கப்பலை ஓட்டுவதற்காகும்; இச்சந்தர்ப்பத்தில் பரலி சு. நெல்லையப்பர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறர்; அதில் சிதம்பரனரின் குடும்பம் அனுபவிக்கும் சிரமங்களை விளக்கியிருக்கிறர்; மாதம் முப்பது ரூபாயில் அவர்கள் வாழ்க்கை நடக்கவேண்டியிருப்பதையும், அவர்களுக்கென ஒரு வீடு இல்லாத பரிதாபத்தையும் அந்த அறிக்கையினின்றும் தெரிந்து கொள்ளும் ஒவ்வொரு தமிழ் மகனும் கண்ணீர் விடுவான் என்பதில் சந்தேகமில்லை. கவர்னர் ஜெனரல் அவர்கள் "சிதம்பரம்" கப்பலை மிதக்க விடுவதோடு, துயர்க் கடலில் தத்தளிக்கும் அவர் தம் குடும்பக் கப்பல் கரைசேரவும் வழி செய்வார் என்றெண்ணுகிறோம்.

சென்னையில் கடந்த பதினெட்டு நாட்களாக உண்ணாவிரதம் பூண்டிருக்கும் சத்தியானந்த சரஸ்வதி இன்னும் அவ்விரதத்தை நீடிக்கவேண்டியிருப்பதற்காக இரக்கப்படுகிறோம்; இந்த உண்ணாவிரதச்சாமி தன்னைச் சந்தித்த ஒரு-மாஜி ஹைகோர்ட் நீதிபதியிடம் "மடாதிபதிகளையும் சமூகத்தையும் எழுப்பத் தாம் தவறிவிட்டதாகவும் ஆகையால் தாம் இனி உலகத்திலிருந்து பயனில்லை" என்றும் குறிப்பிட்டிருக்கிறது. பதினைந்து நாள் கடந்தாவது உண்மையை உணர்ந்து கொண்ட சாமிக்கு நம் பாராட்டுகளை அர்ப்பணம் செய்கிறோம். கார்த்திகை விரதம் பூணும் நம் முதலமைச்சரை, உண்ணாவிரதம் பூணும் இச்சரஸ்வதிச் சாமி வெல்ல முடியாமற் போனதை நயம்படத் தீட்டிக் "கார்த்திகை விரதமகிமை" என்றொரு சிறு புத்தகம் வெளியிடலாமென முருகனடியார்கட்குச் சிபார்சு செய்கிறோம்.

வெளிநாட்டுக் கடனை எதிர்பார்த்து இந்திய சர்க்கார் காரியம் நடத்தும் போதும் நம் சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஏற்றமே யொழிய இறக்கமில்லை. நாளொன்றுக்குப் படி ஏழரை ரூபாயாயிருந்தது பனிரெண்டரையாக ஏற்றம் பெற்றிருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம். இப்படியாகச் சட்டசபை உறுப்பினர்கட்கு 'யோகம்' அடிக்கும் போது தம் எம். எல். ஏ. பதவியை ராஜினாமாச் செய்து விடவேண்டுமென்று யாராவது விரும்புவார்களா? அப்படியொரு சங்கடம் சிவகங்கைத் தொகுதிச் சட்டசபை உறுப்பினர் ஒருவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அத்தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் அந்த எம். எல், ஏ மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி அவராக ராஜினாமாச் செய்யாவிடில் அவர் மீது நம்பிக்கையில்லையென்பதைத் தெரிவிப்பதற்காக அத்தொகுதி வாக்காளர்களிடம் கையெழுத்து வாங்கவும் தீர்மானித்திருக்கிறார்களாம்! அப்போது சிவகங்கை என்ன தீர்ப்பளிக்குமோ?

மைசூர் நீதிபதி தோழர் பட்டராஜ் உர்ஸ் என்பவர் ஒரே மொழியால் இந்தப் பரந்த நாட்டை இணைக்க எண்ணுவது முடியாததாகும் என்றும், சமஸ்கிருதத்தைப் பொது மொழியாக்க எண்ணுவது எவ்விதத்திலும் நியாயமல்ல என்றும் பெங்களூர்க் கல்லூரிச் சமஸ்கிருதச் சங்க விழாவிலேயே தீர்ப்பளித்திருக்கிறார்; அழைக்கப்பட்ட விருந்தினர் தமக்கு இக்கசப்பு மருந்தை நல்குவார் என்று அச்சங்கத்தார் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? இடத்திற்கேற்ற இயல்பினை ஒரு நீதிபதியிடம் எதிர்பார்த்திருந்தால் அது அவர்கள் தவறு தானே!

"இந்து"வும் "சுதேசமித்திர"னும்

இன்றைய நிலையில் பார்ப்பனர்களுக்கு எதிரி நாங்களல்ல. அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள "இந்து" பத்திரிகையும் "சுதேசமித்திரன்" பத்திரிகையுமாகும். இந்நாட்டில் பார்ப்பனர்கட்கு ஏதேனும் இன்னல்கள் விளைந்திருந்தால் அவைகள் "இந்து" வாலும் "சுதேசமித்திர"னாலும் தான் ஏற்பட்டன என்பதை என்னால் நிரூபிக்க முடியும். பழையபடி பார்ப்பனர்கள் சட்டியெடுக்கும் நிலைவரும் வரை "இந்து"வும் "மித்திரனும்" நிலைமையை மோசமாக்கிவிடுமோ என்றும் நான் அஞ்சுகிறேன்.

—பெரியார்

(குடந்தைப் பேச்சு)

துரோகி

— தில்லை வில்லாளன் —



முதல் அத்தியாயம்

காமக்களியாட்டம்

இரண்டு குதிரைகள்.........

அந்திப்பொழுது. மஞ்சள் வெயில் வீசிக்கொண்டிருந்தது. தனியான பாதை. இரண்டு பக்கங்களிலும் அடர்த்தியான மரங்கள். அந்தப் பாதையில் தான் அந்தக் குதிரைகள் மிக மெதுவாக வந்துகொண்டிருந்தன.

குதிரைகளின் மீதூர்ந்து வந்த வீரர்களோ வெகு கம்பீரமாக அமர்ந்திருந்தார்கள். அவர்களின் அலங்காரமான ஆடைகள், அவர்கள் அரசாங்கத்தைச்சேர்ந்த பெரும் பதவியாளர்கள் என்று விளம்பரப்படுத்திக்கொண்டிருந்தன.

அவர்கள் ஏதோ வேடிக்கையாக உரையாடிக்கொண்டு வந்தனர்.

அவர்கள் பேச்சு இடையே சட்டென்று நின்றுவிட்டது. ஆம், அவர்கள் சிந்தனையைக் கவர்ந்துவிட்டது ஒரு காட்சி... ....கண்களின் பார்வைக் கோணத்தைத் தாக்கிற்று. அந்த வழியே ஒரு சுந்தரி வந்தாள்.

ஒரு மின்னல்.....பூங்கொம்பு!

"முடீன், அதோ பார் ஒரு குட்டி"

"ஸுராஜ், நமக்குத் தெரிந்த சிட்டுத்தான் அது"

"யாரது"?

"ஏன் அது உங்களுக்கு?"

"விளையாடத்தான்!"

"போதுமே உங்கள் விளையாட்டு...... அவள் ஊர்மிளா, நமது அமீன்சந்தின் ஆசை மகள்"

வீரர்களின் பேச்சு இப்படி நீண்டது.

பேசியவர்கள் வங்க சுபேதாரின் அன்பிற்குரிய பேரன் ஸுராஜ்-உத்-தௌலாவும் அவனது அருமை நண்பன் முடீன்கானும் தான்! அவர்கள் வழக்கம் போல உலாவச் சென்றிருந்தார்கள். அங்கேதான் வங்கத்தின் பிரபல கப்பல் வியாபாரி அமீன்சந்தின் ஒரே மகள் ஊர்மிளாவைப் பார்த்தனர். வழக்கமாகவே சற்று நெகிழ்ந்த மனம படைத்த ஸுராஜ் பேரழகி ஊர்மிளாவிடம் மனம் விட்டது ஆச்சரியமில்லை!

ஊர்மிளா இடையிலே குடமேந்தி மயில்போல வந்து கொண்டிருந்தாள். அவளது விழிகளின் அடித் தளத்தில் குறுகுறுப்பு எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது! ஒரு விழி வெட்டு உலகையே விலைக்கு வாங்கிவிடும்போலிருந்தது. அவளது விழிகள் இங்கும் அங்கும் பாய்ந்து 'கண்ணாம் பூச்சி' ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தன! திரும்பினாள். திடுக்கிட்டாள். இரண்டுகுதிரைவீரர்கள் வந்து கொண்டிருப்பதைப் பார்த்துச் சற்று பயந்தாள். எனினும் அந்த அலட்சியப் பார்வையும், எதையும் எடுத்தெறிந்து பேசும் துடிப்பான உதடுகளும் பழையபடியே தன் போக்கில் இருந்தன!

குதிரைகள் விரைந்தன. அவள் ஒதுங்கினாள்!

வீரர்களோ வேகமாகச் செல்லாமல் வேண்டுமென்றே மெதுவாக நடத்திச் சென்றனர். அவளால் அவர்களை முந்தவிடவும் முடியவில்லை. பின்னே வரவும் செய்ய இயலவில்லை. சங்கடமான நிலைமை அவளுக்கு! என்ன செய்வாள்? யாரேனும் வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்தாள். இருட்டரசன்தான் வெகுவிரைவாக ஓடிவந்தான்! இதுவரை ஏறிட்டுப் பார்க்காமலே வந்த அவள் திருட்டுத்தனமாகத் தன் பார்வையை அவர்கள் மீது பாய்ச்சினாள்.. அவர்களது பொல்லாத விழிகளோ அந்தக் கணப்பொழுதையும் விடாமல் வேவு பார்த்தன!

அந்த இடத்தில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. இருட்டும் அங்கு விருந்துண்டு கொண்டிருந்தது! ஸுராஜ் திடீரென்று கீழே குதித்தான. குதிரைக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது அவனது செயல்! அடுத்த கணத்தில் குடம் உருண்டது. அந்தக்'குடமேந்தி' அவனது அமுத சுரபியானாள்! ஊர்மிளாவைத் தாவித் தன் கரங்களில் ஏந்திக்கொண்டான். கண்ணிமைப் பொழுதில் அந்தக் காரியம் நடந்துவிட்டதால் அவளால் அதனைத் தடுக்கவும்முடியவில்லை. கூவ நாவைத் தூக்கினாள். அதுவோ 'சட்ட மறுப்பியக்கம்' ஆரம்பித்துவிட்டது! பயமோ, பாதுகாப்புச் சட்டப்படி அதனைக் கைது செய்துவிட்டது! கால்களும கரங்களும உதறின. ஆனால் விடுவிக்கும்முயற்சியில் இறங்க முடியவில்லை!

ஸுராஜ் காட்டினுள் புகுந்து ஓடினன். அவனது நரம்புகள காமத்தால் தாக்கப்பட்டு, என்ன செய்கிறேம் என்று புரியாமல் புரட்சி செய்து கொண்டிருந்தன! ஓடினன், ஓடினன், தக்கதோர் இடம் கிடைக்கிற வரையில்!

எதிரில் ஒரு காளிகோயில்... அதில் மங்கலான ஒளி தெரிந்தது! நுழைந்தான். அவனது பொறுமை பட்டென்று அறுந்து இற்று விழுந்தது. அவனது ஆசைப் புறு மனக் கூண்டையுடைத்துக்கொண்டு வெளியில் வந்து வட்டமிட ஆரம்பித்துவிட்டது! ஊர்மிளாவோ பதுமைபோல அவனது கரங்களில் சிறைப்பட்டுக் கிடந்தாள். அவளும் வாடாதமலர், அதுமட்டுமல்ல, இன்னும் எவராலும் நுகரப் படாத மலர்!

'அலை மோதுதே, அலைமோதுதே என் மனம், ஆடவர் கரம் என் மேல் பட்டதுமில்லை' என்று ஆடிப்பாட வேண்டிய வனமோகினி அவள்! ஆம், அவளுக்கு உண்மையில் அந்த 'சிருங்கார ரசம்' புதிதுதான். ஸுராஜுவின் கரங்களின் அணைப்பு; அவளது உடலிலே இன்ப மணத்தைத் தடவி விட்டது! அவளது உறங்கிய உணர்ச்சி நரம்புகளைத் தட்டி எழுப்பி விட்டது. ஆகவே அவளுக்கு இன்ப மயக்கம்! பசித்த புலி, புசிக்கத் தொடங்கிவிட்டது! மானுக்கோ மயக்கம், ஆகவே எதிர்ப்பு இல்லை!

ஸுராஜ் காமவெறியால் கண்ணிழந்தான். கண் மழுங்காவிட்டால் எதிரில் நின்று கொண்டிருந்த இரு உருவங்களை அவ்வளவு நேரம் பார்க்காமல் இருப்பானு? அமீன் சந்தின் கண்களில் அனல் வீசியது. அடுத்த கணத்தில் புனல் வழிந்தது! பக்கத்தில் நின்றிருந்த சோணிசந்த் சிலை போலானுன்! அந்த காமக் களியாட்டத்தைக் கலைப்பது எப்படி யென்று சிந்திக்கக் கூட அவனுல் முடியவில்லை. அந்தக் காட்சி உணர்ச்சியை வாரியிறைத்தது! அமீன்சந்த் நெருங்கினுன். ஆத்திரத்தால் தாக்கப்பட்டு, கோபத்தால் உள்ளம் வீங்கி, கொந்தளிப்பால் கண்கள் சிவப்பேறிக் காளிகோயில் சிலையைவிடப் பார்க்கப்பயமாகக் காட்சியளித்தான் அவன்.

"அடேய்........."

ஸுராஜ் இன்பபுரியிலிருந்து தலை குப்புற வீழ்ந்தான். ஆடலிலிருந்து எழுந்து ஓடலாமா என்று எண்ணி அவனைப் பார்த்தான். பிறகு ஊர்மிளாவை ஒரு முறை பார்த்தான். இரத்த வெறி — ஆம், 'தசையாசை' அவனைப் பம்பரமாக ஆட்டியது! ஆகவே காமத் தடாகத்தில் தடுக்கி விழுந்தான். அப்பன் உள்ளம் வெடித்து விடும் போலாகி விட்டது. மகளின் இன்பம் காளி கோயிலிலே கொள்ளை! கொள்ளை!

அவர்கள் இருவரும் அவன் மீது பாய்ந்தனர். காமக்களியாட்டம் கலைந்தது. எழுந்தான். போர் மூண்டது. இந்தக் கலவரத்தில்தான் கண் திறந்தாள் ஊர்மிளா. இன்ப மயக்கம் மறைந்தது. தன் தந்தையும், தன்னைக் கவர்ந்து

வந்த முரடனும் போரிடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அப்பொழுது குதிரைகள் வரும் குளம்படியோசை கேட்டது. ஆம் முடீன்கான் வந்தான். சண்டையில் தானும் ஈடுபட்டான்! பிறகு......காளிகோயில் தூண்களிலே அந்த இருவரையும் கட்டிப்போட்டனர்.

தகப்பன் கூவினன்.

"அடேய், நீ அரசாளலாம்; அதற்காக என்மகள் இப்படி அவமானப்படலாமா? அதுவும் காளிகோயிலிலா இந்த அக்ரமம்......ஆனல் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்"

ஸ்ராஜ் ஊர்மிளாவின் இன்பக் கோட்டையிலே மீண்டும் கொள்ளையிடத் தொடங்கி விட்டான். இராமனும் சீதையும் இப்படி அமர்க்களப் படுத்தும் போது இலட்சுமணனுனன், முடீன்கான்! ஆனல் அமீன சந்தோ விகாரமாகச் சிரித்தான்.

இரண்டாம் அத்தியாயம்

வெறிச் சிரிப்பு

சிரித்தான்!

யார்?...............

நல்ல உயரம், அதற்கேற்ற தசை வளர்ச்சி! பார்க்க நல்ல தோற்றம் அந்தப் பரங்கிப் பழம்! அவன் நிறம் நல்ல சிவப்பு.........

அவன் கால்கள் நீண்டு இருந்தன. கரங்களும் அத்துடன் போட்டி போட்டன. அவன் தொந்தி, வாடாது; வதங்காது வாழ்வு பெற்ற உல்லாசி என்று பார்ப்பவர்களுக்குப் பராக்குக் கூறிக்கொண்டிருந்தது. அப்பா ... ... அவன் முகம் மட்டும்......... சொல்ல முடியவில்லையே! பயம் நாக்கை அழுத்துகிறது; ஒரே கோரம்! கோரம் என்றால் விகாரம் மட்டுமல்ல, சீறிபபடமாடும் நாகம் போலப் பயத்தையும் கொடுக்கும் பான்மை கொண்டது. பரந்து விரிந்த நெற்றி, அதில் சந்தனக் கோடுகள் மூன்று. நல்ல உயர்ந்து விரிந்த மூக்கு, அதில் பருத்து விரிந்த மூக்குத் துளைகள். அப்பாடா... அதில் புகுந்து வருங் காற்று விடும் சத்தம்-உஸ், உஸ்-'சாட் சாத்' நாகதேவனே தான்! கன்னங்கள் ஊதி, உபபிபபோயிருந்தன ,இருந்தாலும அதில் சுருக்கங்கள், கோடுகள் அங்கொன்று, இங்கொன்றும் இருந்தன. ஆண்டுகள் கிழித்த அனுபவக் 'காலண்டர்' போலும அவை!

அவனைப் பார்த்தாலே குழந்தைகள் அழுா. சிரித்தால் குமாருக்கும் குலை நடுக்கம எடுக்கும். அத்தகைய கோர சொரூபி எங்கு உலவுகிறுன? ஆா, கல்கத்தாவில்! அவன் தான் அமீன்சந்த்.

அவன் வெளளையன? இல்லை. இல்லவே இல்லை. பின் முகமதியனு? வழுக்கை மண்டையைத் தவிர வேறொன்றும் அடையாட்சியில்லை. ஆனாலும அதில் பறந்துகொண்டிருந்த இரண்டொரு மயிர்கள் அந்த அத்தாட்சியைப் பொய்யாக்கிவிட்டன. ஒரு வேளை

ஒக்கியனுக இருக்க லாமோ? இருந்தாலும் இருக் கலாம். அவன் அணிந்திருந்த உடை அப்படிச் சொல்கிறது. அவன் இந்துவா? 'சந்தனக் கோடுகளும்' பேச்சும் செயலும் சாட்சி சொல்கின்றன. அவன் இந்துவானுல், என்ன இனத் தான்? ஆரியனுக இருந்தால் மறுப்பது யார்? அவன் யாராக இருந்தால் என்ன? அவன் உள்நாட்டான், வெளியி லிருந்து வந்தவனல்லன்! கல் கத்தாவில் பெரிய வியாபாரி, ஏராளமான கப்பல் போக்கு வரத்து உண்டு.

அமீன்சந்த் சிரித்தான்!

ஏன்?.........

ஆம். அவன் சிரிப்பான். எப் பொழுதும் சிரிப்பான். எதைச் சொன்னுலும் சிரிப்பான். அவன் சீறும் நேரங்கள் தவிரப பிற நேரங்களில் சிரிப்பான். ஆகவே வெறியன் என்கிறீர் களா? இல்லை.


சிரிப்பு - எவ்வளவு அழகான சொல்! அது இரு பக்கத் திலும் கூர்மை தீட்டப் பெற்ற கத்தி - சிரிப்பு சீர்பெறவுஞ் செய்யும், சீரழிக்கவும் முடியும் சிரிப்பு ஒரு வகையான மயக்கும் மருந்து, வசிய மருந்து! சிறப் பாக இது பெண்களுக்கே உரியது! அதைப் பயன் படுத்திக் காரியம் சாதிப்பதில் கைதேர்ந்தவன். சிரித்துச் சிரித்துக் குடி கெடுக்கும் பரம் பரையின் ஆதித் தலைவன் அவன் என்றுல் யாரும் மறுக்க முடியாது.

எப்பொழுது சிரித்தான்?

எதிரில் எவருமில்லை. தானு கவே சிரித்தான். பேசும் பொழுது பேச்சுக்குப் பேச்சுக் காட்டும் சிரிப்பிற்கு அர்த்தம் அவ்வளவு அதிகமில்லை. தனித்துச் சிரிக்கும் ஒவ்வொரு சிரிப்பிற்கும் ஓராயிரம் அர்த் தங்கள் உண்டு. சிரிப்பின் ஒலி குறைவானுல், ஏதோ ஒரு குடி கெடுகிறது — சற்று அதிக மானுல் ஒரு கொலை நடக்கப் போகிறது - நீண்டால், சித்திர வதை உருவாகிறது - இப்படிக் கூறிக் கொண்டே இருக்கலாம்.

இப்பொழுது சிரித்தானே, இதற்கும் அர்த்தம் ஏதாவது இல்லாமல் போகுமா? அவன் மனத்தில் பெரிய திட்டம் உரு வாகிக் கொண்டிருந்தது. ஒவ் வொன்றும் அவன் மனத்திரை யில் பட்டுப்பட்டு மறைந்தது!

......அவனது அருமை மகள் ஊர்மிளா அலங்கோலமான ஆடைகளுடன் எதிரில் ஏக்கமே வடிவாக நின்று கொண்டிருந்தாள். அவளது கண்கள் பரிதாபத்தைக் கக்கிக் கொண்டிருந்தன. மீர்ஸா மகமத் - அவன் தான், எதிர்கால சுபேதார் ஸுராஜ் - உத் - தௌலா அவளது இன்பத் தேனை மொண்டு மொண்டு மாந்தி மகிழ்கிறுன். முடின்கான் காவல் இருக்



இருள்! காளியோ கடுங்கோப மாக நிற்கிருள்!

அமீன்சந்த் உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது! அவனுக்கு ஆத்திரம் அளவுக்கு மீறிவந்தது. தன் மகளின் கற்பு பறிபோனதைப்பற்றிக் கூடக் கவலை இல்லை. ஆனல் அது ஒரு முரட்டு முகமதியனுல் கொள்ளையிடப்பட்ட அநியாயத்தை அவனுல் சகிக்க முடியவில்லை.

எப்படியும் அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவனது இதயத்தின் அடித்தளத்தில் ஒரு குரல் தானே எழுந்தது!

ஆனல் அந்த முடீன்கான் பொல்லாதவன், முரடன். அவனது துணையினுல்தான் ஸுராஜ் எந்தப் பயங்கர விளையாட்டுகளிலும் இறங்கிவிடுகிருன். ஆகவே அவனை எப்படி மடக்குவது என்று அவனுக்குப் புரியவில்லை. அதற்காகவே அவன் அவ்வளவு நேரம் யோசனை செய்தான். அவன் சிந்தனையில் ஒரு திடீர் மின்னல் பாய்ச்சல்! ஆம், ஒரு அருமையான திட்டம் பட்டென்று வெடித்தது. ஊர்மிளா அழகிதான். பழுத்துக் கனிந்த கனிதான்! ஆனல் ஊர்மிளா எச்சிலாக்கப்பட்டு விட்டாள். தேன் குடத்திலே துளி நஞ்சு கலந்து விட்டது. இனி அதனைத் தூய்மையாக்க முடியாது! ஆகவே, அவளைக் கருவியாக்கி இந்த விரோதிகள் இருவரையும் வீழ்த்தி விடவேண்டும். வேல் விழிக்கு வீழாத வீரர்களும் உண்டோ உலகில்? அப்படி விழாவிட்டால் அவன் வீரனே? பேடியன்ருே அவனுக்குரிய பட்டப்பெயர்!

அவன் கண்முன்பு பெரிய வியாபாரத்தைத் தொடங்கச் செய்து பிறகு ஏமாற்றிவிட்ட வெள்ளையர்கள் தெரிந்தனர். ஆரம்பத்தில் அமோகமான ஆதரவும், உதவியும் செய்துவிட்டு இடையில் பண்டங்கள் தராது ஏமாற்றிவிட்ட டிரேக் பரம்பரையினர் கோரச்சிரிப்புச் சிரித்தனர்......ஆம், அவர்களுக்குத் தக்கதோர் பாடங் கற்பிக்க வேண்டும் என்று துடியாய்த்துடித்தது அவனது உள்ளம். இப்படி அவன் எண்ணங்கள் ஓடின. ஞானக் கண்களில் சுயநலக் கண்ணுடி இப்போது!

கண்ணுடியை மாற்றுவோமானல்......?

......டில்லியில் பாதுஷா—தலையில் குல்லாய், கையில் குரான், இடையில் கைலி......

.........யாகக் குண்டங்கள் அவிந்து விட்டன. கோயில்களில் பரமசிவன், மகாவிஷ்ணு உபவாசம் இருந்தனர். மணியடிக்கவும் பக்த சிரோன்மணிகளுக்குப் பயம்!

பிராமணர்கள் உச்சிக்குடுமியைத் தட்டினர்! பூணூலைச் சுற்றும் முற்றும் பார்த்து உருவினர். குசுகுசுவெனக் குரலைத் தாழ்த்திக் குசலம் விசாரித்தனர். போர்முனைத்திட்டம் போட்டனர். முப்புரியில் அழுக்குத்திரண்டது. ஆக்ஞை பிறக்கவில்லை.

பஞ்சமர் குல்லாயை மாட்டிக் கொண்டு 'மாஜி எஜமானர்களை'ப் பார்த்துக் கேலி பேசினர். குரானிலே வத்திப்புகை! கீதையிலே செல்! பயந்து கொண்டு வீட்டுத்தோட்டத்து மாட்டுக்கொட்டிலில் பசுபூஜை!

ஆனால் பகிரங்கமாகப் பசுவின் கழுத்தில் பட்டாக்கத்தி!

பாதிரிப்பிரசாரம், சட்டர்ஜி சாமுவேலாகிருன்! இந்து யாத்திரீகர்களின் கப்பல்களில் வெள்ளேயர் கொள்ளேயிடுகின்றனர்.........

கண்ணுடி மாறிற்று. காட்சியும் மாறிவிட்டது!

இவை அத்தனேயும் அவர் மனம் எடைபோட்டுக் கொண்டிருந்தது. முஸ்லீம் ஆட்சி அடியோடு ஒழிக்கப்பட்டாக வேண்டும். வெள்ளேயன் வந்தாலும் பரவாயில்லே! யார்வந்தாலும் தனது பரம்பரை வாழவேண்டும், உழைக்காமல், இளேக்காமல்!—இதற்குத் திட்டம் வேண்டும். பாதுஷா, சுபேதார் அவனுக்கு அடுத்து வர இருக்கும் ஸுராஜ்—உத்—தௌலா இவர்கள் ஒருபக்கம்! டிரேக் வழிவந்தோர் பிறிதொரு பக்கம்! இவர்கள் மோதிக்கொள்ள வேண்டும், கட்டாயம் சண்டையிடவேண்டும். அமீன்சந்த் இரண்டு பக்கங்களிலும் நம்பிக்கையுள்ள செல்லப்பிள்ளேயாக வேண்டும்.

அமீனசந்த் மீண்டும் சிரித்தான். திட்டம் இப்பொழுது உருவாகி விட்டது என்று பொருள்!

அமீன்சந்த் இங்கும் அங்கும் உலவினுன். அவன் கூடவே யாரோ நடப்பது போன்ற ஓசைகேட்டுத் திரும்பினுன். சோணிசந்த நின்று கொண்டிருந்தான்.

"சோணிசந்த்"

"நீ வந்து வெகுநேரமாயிற்ருே?"

"ஆமாம்......"

"எனக்குத் தெரியாதே!"

"பலமான யோசனே போலிருக்கிறது. அதனுல்தான் ஆள் வந்தது கூடத் தெரியவில்லே"

"ஏதாவது செய்திகள் உண்டா?"

"டிரேக் உங்களேப் பார்க்க வரப்போகிருர்"

"பிறகு......"

"மூடின்கானின் மோப்பம் நின்றபாடில்லே. எப்பொழுதும் நம்மைப்பற்றிய ஆராய்ச்சி தான் அவனுக்கு"

"போதும், நிறுத்து"

சோணிசந்த் வெளியேறுகிருன். அமீன்சந்த் வெளியிட்ட வெறிச்சிரிப்பு அந்த அகண்ட மண்டபம் எங்கும் பட்டு எதிரொலித்தது. கேட்கப் பயங்கரமாக இருந்தது. அந்தச் சிரிப்புக் கிடையே வந்து சேர்ந்தாள் ஊர்மிளா!

[தொடரும்]



ஒருவன்: ஆமாம், சரஸ்வதி பூசையின போது புத்தகங்களே அடுக்கடுக்காக வைத்துவிட்டுச சாம்பிராணி, தூப ஆராதனே செய்கிருரகளே... ஏன்?

மற்ருெருவன்: அட, உனக்கு அதன் ரகசியம் தெரியாதா? அப்படியாவது நம்பளவங்களுககு 'எழுதது வாசனே அதிகப்படட்டுமே என்றுதான்'

—"தே பா."

சிலப்பதிகாரக் காட்சிகள்

வி. சு. திருநாவுக்கரசு

1. அறிமுகம்

தமிழன்னையின் பொன்னான திருவடிகளை அலங்கரித்து நிற்கும் அரிய பெரிய காவியம் சிலப்பதிகாரம். அரசர் மரபிலே தோன்றிய துறவி இளங்கோ அடிகள் கடைச் சங்கமிருந்த கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே முத்தமிழ் நலம் கனிந்த புத்தம் புதிய இந்நூலை உரைநடையாலும் கவிதையாலும் புனைந்து பாரதியார் கூறுவது போல நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாய், தமிழ் நாட்டின் மணியாரமாய்த் தொடுத்துச் சூட்டுவாராயினர்.

தன்னையொத்த காவியங்களிலே (சிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி) மற்றவற்றிற் கில்லாத சிறப்பியல்பனைத்தையும குறைவறப்பெற்று மிளிர்வது இந்நூல். காலத்தால் முற்பட்டும் கன்னிளமைத் திறத்தால் அவற்றினும் மேம்பாடுடையது. அன்றியும் கவிதையாலும், கலைப்பண்பின் செறிவாலும், மேற்கொண்ட கதையாலும் இணையற்றதாகி நிற்கிறது.

இயற்கை, மெய்ம்மை இரண்டிலும் வழுவாது பாட்டெழுதிக் குவித்த சங்ககாலத்திலே, காவிய நாடக அமைப்பில் முதன் முதலாய் எழுந்த பெரு நூல் இதுவே. கதை நிகழ்ந்த நாளில் அதைக் கண்ணாற் கண்டும், காதாற் கேட்டும், அறிவால் உணர்ந்தும் ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட பெருமை தமிழ் இலக்கிய உலகில் இதற்கன்றி வேறெதற்குண்டு!

அரசர் நீதியிற் சிறிது தவறினும் அவரை அறக் கடவுள் கொல்லும். கற்புடை மகளிரை உயர்ந்தோர் ஏத்துதல் இயல்பு. ஊழ்வினை செய்த முறையே செய்தவரை நாடி வந்து தன் பயனை அளிக்கும் என்ற மூன்று சிறந்த குறிக்கோள்களை நிலைக்களனாய்க் கொண்டு இக்காவிய மாளிகை எழுப்பப்படுகிறது. இம்மாளிகையிலே உலாவி வரும் நாடக மாந்தருள் முதன்மை வாய்ந்தோரும் மூவரே! அவர் கோவலன், கண்ணகி, மாதவியாவர். சோழநாட்டின் தலைநகராகிய பூம்புகாரிலும் (காவிரிப்பூம்பட்டினம்) பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலும், சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சியிலும் இக்காவியக்கதை நிகழ்ந்திருக்கிறது. எனவே மூன்று நாட்டரசர்க்கும் உரி

யது; இதை 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது; அடிகள் நீரே அருளுக' என வலியுறுத்தும் தண்டமிழ்ச் சாத்தனாரின் வேண்டுகோள் இந்நூல் எழுவதற்கொரு தூண்டுகோலாய் அமைந்தது.

இந்நூல் விரிக்கும் மூன்று காண்டங்களும் மூன்று சுவைகளைப் புலப்படுத்துகின்றன. பூம்புகார் நிகழ்ச்சிகள் இன்பமாய், மதுரை நிகழ்ச்சிகள் துன்பமாய், வஞ்சி நிகழ்ச்சிகள் வீரமாய் முடிகின்றன. மாதவியின் இன்பக்களிப்பு, கோவலனின் சோக முடிவு, கண்ணகியின் மேலான வீர வாழ்வு பவளமாலையின் ஊடே செல்லும் பொற்சரடுபோல நுட்பமாய் ஒவ்வொரு காண்டத்திலும் தனித்தனியாய் ஊடுருவிச் செல்லுகின்றன. கண்ணகியை இம் மூன்று சுவைக்கும் உரிமையாக்குபவருமுண்டு. கண்ணகி வாழ்வில் சோகமுண்டு; நிரம்ப வீரமுண்டு. ஆனால் அவள் அறியாத ஒன்றே இன்பம். மாதவி காதலில் மயங்கிய கோவலனைக் கண்ணகி வனப்புக் கவர்ந்ததில்லையே! கோவலனை மகிழ்விக்கின்ற அளவிற்குக் கண்ணகியிடம் திறமில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம் பருவமும் ஏற்பட்ட மிகச் சிறிய அனுபவமுமாகும். கண்ணகிக்கு மணம் முடிக்கும் நாளில் வயது பன்னிரண்டு. கோவலனுக்கு வயதோ பதினாறு. ஆண்மையாலும், அரிய கலையுணர்வாலும் ஆண்டிற்கு மேற்பட்ட அநுபவம் கோவலனுக்கிருந்தது. இதற்கொப்பான பண்புகள் கண்ணகியிடம் இருந்ததில்லை என்பது புலப்படும். இருவரது தாயும் தந்தையும் மணக்கோலம் காணவே விரும்பினர். இச்செய்தியை 'இருபெரும் குரவரும் ஒரு பெரு நாளான், மணவணிகாண மகிழ்ந்தனர்' என்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவைகளிலிருந்து கதை விரிந்த அமைப்பை ஆராய்ந்தால் பேருண்மை ஒன்று புலப்படும். கணவன் அன்பைத் தொடக்கத்தில் பெறமுடியாமற் போன கண்ணகியின் உள்ளத்தில் காலப்போக்கில் வளர்ந்து வந்த பெண்மை அறமும், பொறுமையும் அவள் வருங் காலத்தில் செய்யவிருக்கும் புரட்சிக்கு உரம் தந்து வந்தன. கோவலன் முடிவு கேட்ட கண்ணகி உயிரெனத் தாம் இதுவரை நினைத்து வந்த



ஒன்றை இழந்த நிலையில் கோபமும் தாபமும் கொண்ட வடிவினளாய் மாறிப்போகிறாள். ஆறாத துன்பத்திலும், அடங்காத சினத்திலும எழுந்த மறத்தீ நீறுபூத்த நெருப்பாய் வஞ்சி மலைநாட்டில் அடங்கி விடுகிறது.

இனி இவைகளை ஆராய்வதன் மூலம் ரசனை குன்றாது அமையும் பகுதிகளைக் காண்போம்.

காவியக் கதை அமைப்பில் வரும் நாடக மாந்தருள் தலைவனும் தலைவியுமே சிறந்தோராவர். கோவலன் கதை முழுதும் தொடர்ந்து வருவதாய்ச் சொல்வதற் கில்லை. கண்ணகியோ முற்பகுதியின் சிறப்பியல்பில் பல மாதவிக்கு வழங்கி பிற்பகுதியனைத்தையும் தானே கவர்ந்து கொள்ளுகிறாள் என்றாலும் காவியமுழுதும கண்ணகியே நீக்கமற நின்று நிலவுகிறாள். காவியத் தலைவியாகிய கண்ணகியை முதன் முதலில் ஆசிரியர் எவ்வாறு அறிமுகப் படுத்துகிறார் என்பதைக் காண்போம்.

தலையிலிருந்து கால்வரை வருணித்தலைக் 'கேசாதிபாதம்' என்றும் அடியிலிருந்து முடி வரை வருணித்தலைப் 'பாதாதி கேசம்' என்றும கூறும் மரபொன்றுண்டு. இவை பற்றிய விரிவுகள் 'இலக்கண விளக்கத்துள்' குறிக்கப்பட்டுள்ளன. இந்நெறியில் காவியத் தலைவியையோ, தலைவனையோ அறிமுகப்படுத்தும்போது ஆசிரியர்கள் சிலர் அறிவிழந்துபோவதுமுண்டு. பலர் மனமபோன போக்கில் கற்பனைத் திறன் எல்லை காட்டும் வரையில் எத்தனை எத்தனையோ பாடல்களை எழுதிக் குவித்திருக்கிறார்கள். இதில் கம்பரும பிறருமசளைத்ததில்லை. ஆனால் இளங்கோ அடிகள் தம் காவிய„ தலைவியாகிய கண்ணகியை முதன் முதலாய் அறிமுகப்படுத்துவதைப் பாருங்கள்:

'மாகவான் நிகர்வண்மை மாநாய்கன்
குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராண்
டகவையாள்

அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை
வடிவென்றுந்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய
பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி
யென் பாள்மன்னோ

தலைவி கண்ணகியின் தந்தையோ 'வாணிகர் வண்கை மாநாய்கன்' (மேகம் போல வழங்கும் கையன) என ஆற்றல் வாய்ந்த இரு சொறகளால் நமக்கு எளிதாய் அறிமுகமாகிவிடுகிறான்.

அவன் வழிவந்த குலக் கொடியாகிய கண்ணகி தோற்றத்தால் பொற்கொடியாகிறாள். படர் பருவம் வந்த அக்கொடிக்குக் கொழுகொம்பு போல வாய்த்தான் கோவலன். 'மாநாய்கன் குலக்கொமபர் ஈகைவான் கொடியன்னாள்' இதுவே கண்ணகியை இளங்கோ நமக்கு நேராக அறிமுகம் செய்து வைக்கும் நெறியாகும். மற்றொரு நெறியாலும் கண்ணகி அறிமுகமாகிறாள். அறிஞர் கூட்டத்தால் ஒருவன் அறிவாளன் என்று அழைக்கப்படுவதே அவனுக்குத் தரும் உண்மையான சிறப்பாகும. அதை யொப்பப் பெண் மக்களால் கண்ணகி

எங்ஙனம் புகழ்ந்து பேசப்படுகிருள் என்பதை நம் காது கொண்டு கேட்க வைக்கிருர் ஆசிரியர். 'இவள் அழகை ஒப்பது திருமகள் வனப்பு; இவள் கற்பை நிகர்ப்பது அருந்ததி கற்பு;' இவ்வாறு அப்பெண்டிர்கள் வாழ்த்துவதோடு மட்டுமல்லாமல் வணங்கவும் செய்கிருர்கள். துறவியாகிய ஆசிரியர் ஒரு பெண்ணின் பேரழகைத் தம் துறவறத்திற்குச் சிறு மாசும் நேராத புதிய நெறியிலே பிற பெண்களைக் கொண்டு பேச வைத்த அருமையும் ஆழ்ந்த புலமையும் இரண்டாலும் வந்த புதுமையும் வியக்கத் தக்கதே!

இத்தகைய கண்ணகிக்கு வாய்த்த கணவன் — கதைத் தலைவன்:

மண்டேய்த்த புகழினன் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த புகழினர் ஆய்த்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசை போக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலனென்பான் மன்னே

பேதை மடவார் பெருங்கூட்டத்திலே கோவலனின்பேரழகு அடிக்கடி பேசப்படுவதுண்டு. அவர்கள் இனிய சொல்லும், மிக்க வனப்பும் வாய்ந்தவர்கள். அவர்கள் முருகனைப்போன்ற பேரழகு வாய்ந்தவன் கோவலன என்று மையல்கொள்வதுமுண்டு. ஆசிரியர் இளங்கோ அடிகள் கதைத்தலைவனுடைய பேரழகை இங்கேனும் பலபடத் தாமேநேராகப்பேசிஇருக்கலாம் இந்நெறியை அவர் இருவர்நிலையிலும் மேற்கொள்ள வில்லை. தம்மினத்து ஆடவனெருவனின் பேரழகைத்தாமேசொல்வதைப்பார்க்கிலும் அதை மதிப்பிடவல்லவர்கள் மகளிரே என அறிந்தஅவர் அறிவின் திறத்திற்கு நாம் எதைஒப்பிடுவது?

கண்ணகியின் கற்பைப் 'தீதிலா வடமீனின் திறமிவள் திறம்' என மாதரால் பேச வைத்தஆசிரியர் அவள் பேரழகிற்கு மாசுவராத கற்பை உணர்த்தத் தீதிலா என்றெரு அடைமொழியால் பிறர்நெஞ்சு புகாக்கற்பு என்று ஒன்ருல் மற்றெனனைறச்சிறப்பித்திருக்கிருர். இத்தகைய கண்ணகிக்கும் கோவலனுக்கும் பூம்புகார் நகரிலே பூமணம் நிகழ்கிறது. நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ் மண மக்கள் இருவரும் வீற்றிருக்கின்றனர். உற்ருரும் உறவினரும் புதுமலர் தூவி வாழ்த்துகின்றனர்.

வள்ளுவப் பெருந்தகை

திருவள்ளுவர் எந்தச் சமயமானலென்? அவர் எந்த வகுப்பானல் நமக்கென்? அவர் பிறப்பில் சைவராயினும் ஆகுக! வைணவராயிருப்பினும் இருக்க! சமணராயினும் அன்றிப் பிற எவராயினும் ஆகட்டும். அண்ணர் பிறப்பில் பார்ப்பாராயினும் பறையரேயாயினும் நமக்கு ஒரேமாதிரிதான். திருவள்ளுவர், சாதி சமயச் சுழியில் பட்டுக் கரையேற மாட்டாது தடுமாறும் சிறுதகையினரல்ல; அப்புலவர் பெருமான், வகுப்புக்கும் மதத்திற்கும் அப்பாற்பட்டவர்.

—ராய. சொக்கலிங்கம்

(வள்ளுவர் தந்த இன்பம்)

வளரும் இலக்கியம்

கடவுளால் ஆகாதது

தோழர் டி. கே. சீனிவாசன் எழுதிய நான்கு கதைகளின் தொகுப்பு இந்நூல். இவைகள் கற்பனைக் கதைகள் அல்ல. நாட்டு நிகழ்ச்சிச் சித்திரங்கள். தாசியின் மகள் தாசியாகவேயிருக்கும்படியுள்ள சமூகத்தைத் திருத்தக் கடவுளால் ஆகவில்லை; பெரியார் ராமசாமியால்தான் ஆயிற்று என்று குறிப்பிடுவது பொருத்தமாகவுள்ளது. கதையில் வருபவர்களின் உள்ளத்தைச் சூழ்நிலைகளைக் கொண்டு விளக்குவது தோழர் டி. கே. சீ. எழுத்தின் சிறப்பு. அவருடைய கதைகளை வேகமாகப் படித்துவிட முடியாது. ஒவ்வொரு எழுத்தும் சிந்திக்கத் தூண்டும். வெளியிட்டோர், திராவிடன் பதிப்பகம், த. பெ. 18. வேலூர் (வ. ஆ.) விலை அணா 8.

காதற் கவிதைகள்

காதலனும், காதலியும் பேசிக்கொள்வது போன்றமைந்த சுவையான கவிதைகள் நிறைந்துள்ளன. சுத்தானந்த பாரதியாரின் நல்லுரையும் கவிதையை மேன்மைப்படுத்துகிறது. ஆசிரியர்: "மணியன்" வெளியிட்டோர்: பாரதிவாசகசாலை, பூசேரி, தேரிருவேலி P. O. விலை 5 அணா.

ராமஸ் மசாரிக்

ஜெர்மனியரின் ஆதிக்கத்தில் அகப்பட்டு உழன்ற செக், ஸ்லோவக் இனமக்களின் அரசியல் சமுதாய கலாசார வாழ்க்கை விடுதலைக்காகப் போராடி வெற்றி பெற்ற வீரரின் ஒப்பற்ற வாழ்க்கை வரலாறு. வெளியிட்டோர்: முயற்சி வெளியீடு, 64, டிஸ்பென்சரி ரோட் பல்லாவரம்; சென்னை, விலை 12 அணா.

குறள் காட்டும் தெய்வம்

கிராமிய மக்களின் உரையாடல் மூலம் திருவள்ளுவர் கூறும் உழைப்புச் செல்வத்தை விளக்குகிறார் ஆசிரியர். நல்ல முயற்சி. ஆசிரியர்: "பிவியார்" கலைச் செல்வ நிலையம். சென்னை 2. விலை 3 அணா.

அணிகலம் (பொங்கல் மலர்)

ஒவ்வொரு ஆண்டும் போலவே, இவ்வாண்டும், கட்டுரை, கதைகளாலும், வண்ணப்படங்களாலும் வனப்புற்று விளங்குகிறது. திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சிலப்பதிகாரத்தில் மாதவியின் நாட்டியத்தைப் பற்றி எழுதியுள்ள கட்டுரை மிக நன்றாக உள்ளது. பிரபல எழுத்தாளர்கள் கட்டுரை கதைகள் எழுதியுள்ளனர், ஆசிரியர்: எல். கதிரேசன் செட்டியார், அணிகலம் காரியாலயம், புதுக்கோட்டை.

திரை தூதன்

புத்தாண்டிலே பூத்துள்ள புதிய சினிமா இதழ். 'திரை உலகிலே நிகழும் சம்பவத்தையோ செய்தியையோ மறைக்காமல் — மறுக்காமல் வெளியிடத் தூதன் ஒருநாளும் பின் வாங்கமாட்டான்' என்று அறிமுகமாகிறான் திரை தூதன். தனி இதழ் 2 அணா. மாதமிருமுறை. ஆசிரியர்: 'சேரன்' 1. தர்மராஜாகோவில் முதல் சந்து, சென்னை 1.

தென்னாடு

திராவிடக் கழகக் கொள்கைகளைப் பரப்பப் பிறந்துள்ள புதிய மாதஇதழ். தனி இதழ் 2 அணா. ஆசிரியர்: S. R. சாமி, சாக்கோட்டை, கும்பகோணம்.

— முத்து



எரிமலை தணிந்தது

மு. அண்ணாமலை

உலகத்தின் தொடர்பில்லை; துறவியவ னில்லை!
உதிர்க்கின்றான் கண்ணீரே; உளம்நைந்த தில்லை!
கலகலென நகைக்கின்றான்; களிப்புமிக வில்லை!
கந்தையினைக் கட்டுகின்றான்; வறுமைவர வில்லை!
சலசலென மயில்போலத் தனிநடனம் செய்வான்;
தரணியிலே கலைவாழ்வை அவன்நடத்த வில்லை!
நலங்கெட்டுத் திடமென்று பைத்தியமாய்ப் போன
நல்லிளைஞன்— அவனைத்தான் நான்காட்டு கின்றேன்!

* * *

ஒருமாத மதன்முன்னர் உணர்வோடி ருந்தான்
உடலத்தில் துளிர்போல ஒளிவைத்தி ருந்தான்.
ஒய்யார நடைநடந்து தெருவினிலே வந்தால்
இதழோரப் புன்னகைக்கு ஏங்கினவர் பலரே?
இருக்கவென வரவேற்க இருந்தவரும் பலரே!
கைகோர்த்துச் செல்லப்பல் காளைகளும் உண்டே!
இன்றைக்கோ ஏனென்று கேட்பார்கள் இல்லை!
இரக்கத்தால் முகம்பார்க்க ஒருவருமே இல்லை!
சிறுபிள்ளைக் கூட்டங்கள் புடைசூழ்ந்து கொண்டு
சிரிப்பிருக்கும் அவன்முகத்தைத் தொட்டுவிளை யாடி
கருக்காகக் கல்லெடுத்து வீசுகின்ற போது
கண்டிக்க ஒருவருமே கூட்டத்தில் இல்லை!
என்றாலும் இவ்வுலகம் பாதியது மில்லை!

* * *

அவன் மனைவி புலம்பினாள்:

திருமணமும் ஆகியொரு திங்கள்வர வில்லை
தெவிட்டாத தீஞ்சுவையால் வாழ்வைத்தேன் ஆக்கி
அமிழ்த்துகின்ற சுவையுணர்வும் அற்றுவிட வில்லை!
அதற்குள்ளே நான்வாட நலமிழந்து போனாய்!
தொடுவதற்கும் மனமில்லாத் தொழுநாற்றம் ஏறக்
தூசியெல்லாம் வருகவெனக் குடியேற்றம் ஆக்கி
இடுகின்ற சட்டையினை எப்படிநான் பார்ப்பேன்!
தும்பைப்பூப் பூத்ததுபோல் தூயஉடை எங்கே!
துகள்சிறிது பட்டாலும் தொட்டஉடை நீக்கி
அடலேறுபோல் நடக்கும் அந்த நடையெங்கே!
ஐயையோ அவலத்திற் காளாகி னையே!
அடுக்களையுள் மெல்லனவே அழகுமுகம் காட்ட
அழுக்கான என்கையின், நிலைமறந்து போக
வெடுக்கெனவே உனைத்தொட்டு வெட்கத்தால் நின்றேன்!

வெள்ளுடையில் துகளேற நீபொறுக்க வில்லை!
அப்படியெல் லாமிருந்த அத்தானே அத்தான்
ஆகாத நிலைக்கின்று பலியாகி விட்டாய்!
அன்றொருநாள் பிள்ளைகளை அழைத்துவரச் சொல்லி
அடுத்திருக்கும் பள்ளிக்கோ ஆளனுப்பி வைத்தாய்!
எடுத்தெடுத்துப் பொம்மைகளை ஈந்தீந்து நின்றாய்!
எடுத்தியும் உன்னழகை இனியென்று காண்பேன்!
விளையாட்டுப் பொருள்தந்த வியன்வள்ளல் தன்னை
விளையாட்டுப் பாவையென இன்றுவிளை யாடும்
இளஞ்சிறுவர் கூட்டத்தை என்னென்று காய்வேன்!
இரக்கமிகும் என்வாழ்வுக் கெவரைத்தான் நோவேன்!

* * *

மடமடெனப் பாய்ந்தோடும் மானுக்குக் கால்கள்
படபடென ஒடிந்ததனைப் பார்க்கின்ற பெண்மான்
கக்குகின்ற திருவிழியின் சோகத்தை இங்கே,
காட்டுகின்ற படத்தினையா நான்காட்ட வேண்டும்!
அழகுடலைத் தீயோடி அணைத்ததனைக் கண்டேன்!
ஐயையோ அவ்வுடலம் கருகிவரக் கண்டேன்.
மலையிருந்த இடத்தினிலே பள்ளத்தைக் கண்டேன்!
மதுக்கிண்ணம் உடைந்துவிழ அதன்நிலையும் கண்டேன்.
பயிரிருந்த பெருவயலைத் தரிசாகக் கண்டேன்.
பார்த்திருக்க வொண்ணாத பரிதாப மன்றோ?
வண்டமிழப் பாண்டியன்போல் வாழ்வளித்த அத்தான்
வகைகெட்டு மருக்கொள்ளப் பார்த்திருக்கின்றேனே!

* * *

அவன்மனைவி கூறியவை அன்றென்க: நெஞ்சம்
அணைக்காத பெருநெருப்பின் ஆற்றலென்க; பாலைக்
கொட்டிவைக்கும் பெருஞ்சூட்டின் கோரமென்க; அந்தக்
கொடுமையினைப் படம்பிடித்த உடைமை யீதென்க!

* * *

மற்றொருநாள் நானந்தத் தெருவழியே சென்றேன்.
வரிவரியாய் எலும்பாகி வனப்பெல்லாம் போக்கி
இறந்தாளே எனச்சொல்லி ஏங்கினர்கள் ஊரார்!
எனக்குந்தச் செய்தியினால் எள்ளளவும் உள்ளம்
இரங்கிடவே இல்லையெனில் ஆச்சரிய மில்லை!
எரிமலையின் குளிர்ச்சியிலே என்னய்யா துன்பம்?
கறையான்போல் அவள்நெஞ்சைக் கத்தரிக்கும் போது
கடைகெட்ட வாழ்விக்கு கற்கண்டா என்ன!





பாரதிதாசன் பரம்பரை

[தமிழாசிரியராய்ப் பணியாற்றும் அன்பர் கதி. சுந்தரம் மூன்றாம் ஆண்டுத் தொடக்கத்தில் அறிமுகம் பெறுகிறார். 'வெண் முகில்' அவர் இயற்றியது. வலம்புரி சுந்தரம் என்று அவரை அழைப்பர். தமிழார்வம் மிக்க இளைஞர். — ஆசிரியர்]

வெண்முகில்

வெண்முகிலே! உன்னைப்போல் கடலை நோக்கி
விரைந்தோடும் கட்டழகி தன்னைப் பாராய்
தண்மணத்தின் சின்னாளில் கணவன் மாய்ந்தான்
சாற்றிநின்றாள் தையலவள் வேற்று மணம்
வன்மனத்தார் சுற்றத்தார் வாட்டி விட்டார்
வாழ்க்கையிலே வெறுப்புற்றாள் முடிவு காண்பாள்
ஒண்முகிலாள் வெண்மையதோ உலகை ஆட்டும்
உன்வெண்மை உலகத்தார்க் கின்ப மூட்டும்

உற்றறியும் ஒருமனிதன் ஒற்றைக் கையை
உயிரோடும் மூக்கதனில் வைத்து லாவும்
பெற்றியது என்றுரைக்கப் பெரிய வானில்
பேசாமல் சுற்றுகின்றாய் அங்கும் இங்கும்
வற்றாத கடலதுவும் தம்மால் அன்றோ
வாழ்கின்ற தென்கின்ற எண்ணத் தாலே
எற்றாலும் பிறர்உதவி எனக்கு வேண்டாம்
என்கின்ற செருக்கதனைக் கொண்டாய் நீயே.

மடமைதரு அச்செருக்கு மாளும் என்றேன்
மாக்கடலின் பக்கத்தே பணிந்து நின்று
கடல்சிரித்துத் தருகின்ற தண்ணீர் தன்னைக்
கதிரவனின் உதவியதால் கவர்ந்து கொண்டாய்
உடலதனின் குருதியதை உறிஞ்சி விட்டே
உறுமுகின்ற கூட்டத்தார் தன்னைப் போன்று
கடலதனின் நீரதனைக் கவர்த்த பின்பு
கதறுகின்றாய் கார்க்கடலை எதிர்த்து மேலே!

குதிரைப் பந்தயம்

சி. கன்னியப்பன்

தன் வருகையைக் கூட உணர்ந்து கொள்ளாது அப்படி அவர் லயித்திருக்கக் காரணம் என்ன என்று தன் மனத்தைக் கலக்கிக்கொள்ளவில்லை அவள். அதுதான் அவளுக்குத் தெரிந்த விஷயமாயிற்றே! மேஜை மீதிருந்த 'ரேஸ்புக்' நான்கைந்து தினசரிகள் இவைகளைப் பார்த்த சந்திராவுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"என்ன, இன்றைய 'டிரிபிள் இவன்ட்' 'பாஸா'ல் என்ன தொகை கிடைக்கும் என்ற சிந்தனையோ?" என்று கேட்டுக்கொண்டே காபியை மேஜை மீது வைத்தாள்.

சிந்தனை கலைந்த சாமிநாதன் "என்ன சந்திரா! இன்று நீ கூட 'ரேஸை'ப்பற்றிச்சந்தோஷமாகப் பேசுகின்றாயே! வழக்கமாக வைக்கும் ஒப்பாரியைக் காணோமே!" என்றான் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்! ஒப்பாரிவைத்து நான் கண்டபலன்? நானும் இந்த ஒரு வருஷமாச் சொல்லிக்கொண்டுதான வருகிறேன். 'சந்திரா! இது தான் கடைசித் தடவை; இனி நான் கிண்டிப் பக்கம் தலைகாட்டப்போவதேயில்லை' என்று எத்தனை கடவுள்களைச் சாட்சி வைத்தாயிற்று!"

"இல்லை சந்திரா! சத்தியமாகச் சொல்கிறேன். இன்று ஒரு நாள்மட்டும் மன்னித்துவிடு. இன்று 'டிரிபிள்' எனக்குத்தான். நீயும் அதைத்தான் முதலிலேயே சொல்லிவிட்டாயே! இதுவரை நான் இழந்த பணத்தையெல்லாம் இன்று 'ஷங்கர்' வாங்கிக்கொடுத்து விடுவான். இதோ பார்! இந்தப் பத்திரிகைகள் கூட இன்றைக்கு ஷங்கருக்குத்தான் நல்ல 'சான்ஸ்' என்று சொல்கின்றன" என்று சொல்லிக்கொண்டே மேஜை மீதிருந்த பத்திரிகையைக் கையில் எடுத்தான் சாமிநாதன்.

"நல்ல பத்திரிகைகள்! நாசமாய்ப் போக! தேசீய தினசரிகள் என்று சொல்லிக்கொண்டேகூதாட 'செலக்ஷன்' கொடுக்கிற இந்தப் பத்திரிகைகள் என்றுதான் ஒழியுமோ? எப்படியாவது போங்கள்! குழந்தைக்கு இம் மாதம் பிறந்த தினம் வருகிறது. காலணா கையில் இல்லை. கடன் வாங்கியாவது நீங்கள் 'ரேஸ்' ஆடிக்கொண்டிருங்கள்; நமது குடும்பம் வாழ்ந்துவிடும்!" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டுச் சமையற்கட்டை நோக்கி நடந்தாள் சந்திரா.

எங்கிருந்தோ அவன் வந்தான்!

தான் உண்டு; தன் கடையுண்டு என்றிருந்த சாமிநாதனுக்கு 'ரேஸ்' பைத்தியம் பிடிக்கச் செய்துவிட்டான். கடையில் வந்து லேவாதேவி செய்

யும் போதெல்லாம் 'ரேஸை'ப் பற்றிப் பேசி அதில் அதிர்ஷ்டம் அடிப்பதாக அவன் சொன்னாலும், அதையப்படியே முழுக்க முழுக்கச் சாமிநாதன் நம்பியதற்கு அந்த ஆசாமியை நாம் எப்படிப் பழிக்க முடியும்?

அன்றுதான் சாமிநாதன் முதன் முதலாக 'ரேஸ் கோர்ஸ்'க்கு சென்றிருந்தான். அவன் எடுத்துச் சென்றிருந்த ரூபாய் என்னவோ முப்பது தான். ஆஸ்திரேலியக் குதிரையென்றோ, அராபியக் குதிரையென்றோ அவனுக்கு ஒன்றும் தெரியாது. அப்படியிருக்க ஜாக்கிகளின் விவரம் மட்டும் அவன் எப்படித் தெரிந்துகொண்டிருக்க முடியும்? அப்படியிருந்தும் அவனுக்கு அன்று அதிர்ஷ்டம் அடிக்கத்தான் செய்தது. 'ரேஸ் கோர்ஸை' விட்டு வெளியே வரும்போது அவனிடம் 65 ரூபாய்கள் இருந்தன.

ஒரு நான்கு மணி நேரத்திற்குள்ளாக 30ரூபாய், 65 ரூபாயாகக் குட்டி போடும் வித்தையை முதல் அனுபவத்திலேயே கண்டுவிட்ட அவனுக்கு அடுத்த 'மீட்டிங்'கிற்கும் அவசியம் போக வேண்டும் என ஆசையெழுந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது!

ஆனால் அடுத்த 'மீட்டிங்கி'ல் நடந்ததென்ன? 'நெக்'கில் போய்விட்டதப்பா என்று அந்த ஆசாமி சொன்னான். 'நெக்'கில் போவதற்கு அர்த்தம் கண்டுகொள்ளச் சாமிநாதனுக்கு அதிக நாள் பிடிக்கவில்லை. ஒரு வருஷ காலத்தில் அந்த 'சீசன்' பூராவும் 'நெக்'கில்தான் போய்க்கொண்டிருந்தது. ஆம்! 'வின்னிங்போஸ்ட்' வரை முதலாவதாகத்தான் வரும் அவன் குதிரை. அப்புறம் 'நெக்'கில் 'வின்' பண்ணிவிடும் இன்னொரு குதிரை! எடுத்துச் செல்லும் ரூபாய் நோட்டுகளுக்குப்பதிலாகப் பல்வேறு எண்களுள்ள செல்லுபடியாகாத 'வின் டிக்கெட்டு'களும் ஏதோ சில்லறையும்தான் அவன் 'பாக்கெட்டில்' இருக்கும்.

காபியைக் குடித்த பிறகு சாமிநாதன் தீவிரமாக யோசித்தான். மனைவியின் மனம் கோணாமல் மற்றைய விஷயங்களில் நடந்தும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவள் எண்ணத்திற்கு மாறாக ஏன் நடக்க வேண்டும் என்றுதான் சிந்தித்தான் சாமிநாதன். ஆனால் அவன் எதிரில் இருந்த 'ரேஸ்புக்' கொடுத்துள்ள அன்றைய 'டெட் சர்டெயன்டி'யை அந்தப் பிரபல தினசரியும் ஆமோதித்திருந்த அந்த அதிர்ஷ்ட குதிரையை இன்று ஆடாமல் எப்படிவிட்டு விடுவது? இப்படியும் அவன் சிந்தனை சுழன்றது. இன்றுமட்டும் 'ரேஸ்கோர்ஸ்'க்குப் போய் வந்துவிடுவது என்ற முடிவுடன்தான் கடைக்குப் புறப்பட்டான் சாமிநாதன்.

"போட்ட இடத்தில் தானே பணத்தைத் தேட வேண்டும்!"—இந்த உபதேசம் தான் அவனை "ரேஸ் கோர்ஸை" விட்டு மீள விடாமல் செய்து வந்தது......

'ரேஸ்புக்'கும் பிரபல பத்திரிகைகளும் கொடுத்திருந்த 'செலக்ஷன்' 'பாஸ்' ஆகவில்லை அன்று. அன்றைய 'சான்ஸ்' ஒன்றுகூட ஷங்கருக்கு வரவில்லை. கற்றுக்குட்டி ஜாக்கி யாரோ அதைத் தட்டிக்கொண்டு போய்விட்டான்.

"நான் அப்பவே சந்தேகப்பட்டேன், இந்த 'ரைடிங்பாய்' ஏதாகிலும் செய்து விடுவான் என்று" இப்படியாக விமர்சனம் செய்துகொண்டிருந்தனர், கிண்டியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அந்த அதிர்ஷ்டம் தேடிகளின் கூட்டத்திலே சில அனுபவசாலிகள்.

சாமிநாதன் இம்மாதிரி ஏதும் விமர்சனம் செய்யவில்லை என்றாலும் இனி 'ரேஸ் கோர்ஸ்'க்குப் போகக்கூடாது என்ற முடிவுடன்தான் வீடு திரும்பினான்.

அவனது இந்த முடிவுக்குத் தகுந்த காரணம் இருக்கத்தான் செய்தது. வியாபாரத்தில் வந்த லாபம் முழுவதையும் எடுத்து 'ரேஸ்' ஆடியதோடு, முதலிலும் கை வைத்தாய்விட்டது. இனியும் முதலில் கையை வைத்தால் கடையைக் கட்டிக்கொண்டு வந்துவிட வேண்டியதுதான் என்ற பொருளாதார நெருக்கடிதான் சாமிநாதனுக்கு மேற்கூறியமுடிவைஉண்டாக்கியது.

அடுத்து மூன்று வாரங்களாகச் சாமிநாதன் 'ரேஸுக்கு'ப் போகாதது சந்திராவுக்குக்கூட ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டது.

அன்று சாமிநாதன் கடையில் உட்கார்ந்து வரவு செலவுக் கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னப்பா! ஏது, சனிக்கிழமையும் அதுவும் கடையில் உட்கார்ந்துவிட்டாயே! இன்று 'லாஸ்ட் மீட்டிங்' ஆச்சே" என்று சொல்லிக்கொண்டே கடைக்கு வந்தான் அந்த ஆசாமி.

"போயிட்டுப் போகுது. நமக்கெல்லாமா அதிர்ஷ்டம் அடிக்கப்போவுது. இந்த 'எழவுக்கு'ப் போயிருக்கலேன்னா இந்த வருஷம் என் கையிலே ஆயிரம் ரூபாய் இருந்திருக்கும்; கடன் தொல்லைகளும் வந்திருக்காது" என்றான் சாமிநாதன்.

"அதென்னப்பா அப்படிச் சொல்லிட்ட. போட்ட இடத்தில் தேடினாத்தானே கிடைக்கும்! இதற்குள்ளே சலித்துக் கொள்ளலாமா?"

"அட போப்பா! உன் பேச்சைக்கேட்டுக் கடன்காரனாவே ஆயிட்டேன்" என்று தன் ஆத்திரத்தைப் பேச்சிலே கொட்டினான் சாமிநாதன்.

"என்னமோப்பா? ஏதோ 'லக்ஷ்மி கடாக்ஷம்' இன்னிக்கு உனக்கு இருக்குதுன்னு நெனைச்சேன். அந்த 'ப்ராப்தம்' உனக்கு இல்லே போல இருக்கு. இதோபார்! 'ஸ்டேபில் நியூஸ்' வந்திருக்கு. 'ராஜா ஆப் ராம்னாட்' குதிரை ஒன்னும், தரணிசிங் குதிரை ஒன்னும் இன்னிக்குக் கட்டாயம் 'வின்' பண்ணப் போறது. உன்னாலே எவ்வளவு முடியுமோ அவ்வளவு 'பேக்' பண்ணு. பின்னாலே ஏம்பா இந்த விஷயத்தைச் சொல்லலேன்னு என்னைப் பழிவாங்காதே" என்று சொல்லி, இரண்டு குதிரைகளின் பெயரை ஒரு துண்டுக் காகிதத்

தில் குறித்து அதைக் 'கல்லா' மேல் வைத்து விட்டுப் போய் விட்டார் அந்தப் பரோபகாரி!

சாமிநாதன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான். பிறகு, அந்தக் குதிரைகளின் பெயர் பொறிக்கப் பட்டிருந்த அந்தத் துண்டுக் கடிதத்தின் மேல் அவன் பார்வை விழுந்தது. அடுத்த நிமிஷம் அந்த இரண்டு குதிரைகளும் 'கேலப்'பில் ஓடி அநேக 'லெனந்தில்' 'வின்' பண்ணின மாதிரி கம்பீரமாகக் காட்சி அளித்தன.

அக்கணமே தன்மீது 'லக்ஷ்மி கடாக்ஷம்' விழுந்து விட்டதாக உணர்ந்த சாமிநாதன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்று. 'கல்லா'வைத் திறந்து ஒரு அணு விடாமல் எல்லாத்தொகையையும் எண்ணினான். பத்தே ரூபாய்கள் தான் தேறின. இந்தப் பத்து ரூபாய்மட்டும் போதுமா என்ன அதிர்ஷ்டத்தை வாங்க! ஏதோ யோசித்தான் சாமிநாதன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவசர அவசரமாகக் கடையை மூடிக் கொண்டிருந்தான்.

"ஏது, இவ்வளவு சீக்கிரம் கடையைக் கட்டிக்கிட்டு வந்திட்டிங்க. ஏ! மறந்தே போயிட்டேனே. இன்னிக்குச் சனிக்கிழமை இல்லே......"

"அதெல்லாம் ஒன்னுமில்லே, சந்திரா. கொஞ்சநேரத்திற்கு முன்னே நம்ப கருப்பையா செட்டியார் வந்திருந்தாரு. அவர் 'மீன்சா' பருப்பு வகையறு கொஞ்சம் 'சஸ்தாவா' வருது. அவர் கிடங்குக்கு வரச்சொல்லிட்டுப் போனாரு. அதை வாங்கிவந்தா நல்ல லாபத்துக்கு விற்கலாம். பணமோ கையிலே இல்லே. அதுதான் யோசனையா இருக்குது" என்று சொல்லிக் கொண்டே 'ஈஸிசேரில்' சாய்ந்தாள் சாமிநாதன்.

சந்திரா சிறிதுநேரம் யோசித்தாள்.

"என்னங்க, அதுக்காகவா பிரமாதமாக மண்டையை உடைச்சுக்கிறீங்க. என் 'செயின்' இருக்குது இல்லே. அதை அடகு வைச்சிப் பணம் வாங்கிக்கங்க. அந்தத் தொகை போதும்மில்லே" என்று சொல்லிக் கொண்டே தன் கழுத்திலிருந்த 'செயினை'க் கழற்றி அவன் கையில் கொடுத்தாள் அவள்.

"சந்திரா! நான் வர நேரமானாலும் ஆகலாம். ஜாக்கிரதையாயிரு" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டான் சாமிநாதன்.

'ரேஸ்' பைத்தியம் பிடித்திருந்த தன் கணவன் அதை அறவே மறந்து விட்டாரே! அது நமது அதிர்ஷ்டந்தான். அவர் அதே 'ரேஸ்' ஞாபகமாகவே இருந்திருந்தால் இன்று வியாபார விஷயமாய் அவர் மனம் சென்றிருக்க முடியுமா?' என்று தன் கணவனின் மனமாற்றத்தை எண்ணி உள்ளம் பூரித்துக் கொண்டிருந்தாள் சந்திரா.

சாமிநாதன் வெளியே சென்ற சில மணி நேரத்திற்குள்ளாகச்

'சாக்ஷாத்' கருப்பைய செட்டியாரே அவன் வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்றுச் சிறிது நேரம் பேசியதிலிருந்தே சந்திராவுக்கு விஷயம் விளங்கி விட்டது. எதையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்,

"உங்கள் பெயரைச் சொன்னதாத்தான் ஞாபகம்...யாரோ பருப்பு வகையருக்கள் தருவதாகச் சொன்னார்களாம். அதற்காகத்தான் போயிருக்கிறார். அவர் வந்ததும் நீங்கள் வந்ததாகச் சொல்கிறேன்" என்று பேசி அவரை வழியனுப்புவதற்குள் அவளுக்குப் போதுமென் விட்டது.

சந்திராவிற்கு இருப்பே கொள்ளவில்லை. சமயலறைக்கும் தெருவிற்குமாக நடந்து கொண்டிருந்தாள். ஏதோ நச்சரித்த குழந்தை சிவகாமுவைக் கூட அடித்து விட்டாள். தன் கணவனின் நடத்தை இவ்வளவு கேவலமாகத் தன்னிடம் கூடப் பொய் பேசும் அளவுக்கு வளர்ந்து விட்டதை நினைக்கும் போது அவளுக்கு வயிற்றைப் பற்றிக் கொண்டு எரிந்தது.

இருட்டிய பிறகு வீடு திரும்பிய சாமிநாதனின் முகத்தில் களையே இல்லை. பரோபகாரி கொடுத்த 'இன்பர்மேஷனை' நிரூபிக்க அந்தக்குதிரைகளுக்கு அறிவிருந்தால் தானே! விளக்கெண்ணெய் வழிந்து கொண்டிருந்த தன் கணவனின் முகத்தைப் பார்த்த சந்திராவின் சந்தேகம் ஊர்ஜிதமாகியது.

எவ்வளவோ பொறுத்தும் கூட அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை.

"என்ன உங்களைத்தானே! பருப்பெல்லாம் வாங்கியாய் விட்டதா? காலையிலே இருந்த சந்தோஷத்தை இப்போது காணோமே!" என்று குத்தலாகவே கேட்டு விட்டாள்.

"பருப்பெல்லாம் காலையிலே கடைக்கு வந்திடும்" என்று பொறுப்பற்ற முறையில் பதிலளித்தான் சாமிநாதன்.

"ஓ! அதற்காகப் பணத்தை 'ரேஸ் கிளப்பி'ல் கட்டி விடச் சொன்னாரோ கருப்பைய செட்டியார்" இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவள் கன்னத்தில் 'பளீர்' என ஓர் அறை விழுந்தது.

பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு அவள் சொன்னாள்.

"எனக்கு விஷயம் தெரிஞ்சு போச்சு. நீங்கள் வெளியே போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கருப்பைய செட்டியார் வந்தார். பருப்பு வகையரு ஏதாவது இருந்தா உங்கக்கிட்டே வாங்கிக் கொண்டு போகத்தான் வந்தாராம்."

இதைக்கேட்ட சாமிநாதன் முகம் சுண்டி விட்டது. அப்படியே 'ஈஸி சேரில்' சாய்ந்து விட்டான்.

"செயினுக்காக நான் வருத்தப் படலே. 'ரேஸி'லே பணத்தைக்கொண்டு போய்க் கரியாக்குவதோடு அநியாயமாய் புளுகவும் ஆரம்பிச்சுட்டீங்களே

இந்த ஐந்து வருஷ காலமா நம்மிடையே இருந்த அன்பு எங்கே இந்த 'ரேஸ்' விஷயமாகவே பாதிக்கப் பட்டு விடுமோ என்பதை நினைக்கக் கூடப் பயமாய் இருக்கிறது''

இதற்குமேல் கேட்கச் சாமிநாதனல் பொறுக்க முடியவில்லை. 'சர்'ரென்று எழுந்து வெளியே வந்து விட்டான். தன் கண்களின் ஓரம் தேங்கியிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தான்.

இரவு பதினொரு மணிக்கு மேல் வீடு திரும்பிய சாமிநாதன் நேரே தன் அறைக்குப் போனன். அங்கே சந்திரா அந்த 'ஈஸிசேரில்' படுத்துக் கொண்டிருந்தாள். குழந்தை சிவகாமு அவள் மடியில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஜன்னல் கம்பிகளிடையே ஊடுருவி வந்த சந்திரனெளி அவள் முகத்திலே பட்டு இன்ப ஜாலங்கள் செய்து கொண்டிருந்தது.

சாமிநாதன் சந்திராவை உற்றுப் பார்த்தான். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னைக் கவர்ந்த அந்தக் 'குழந்தை முகத்தை'த் தான் கண்டான்.

''வாழ்க்கையில் எனது இன்பதுன்பங்களில் சரிபங்கு கொண்ட இவளுக்கு என்னைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள்? வீட்டையும் உற்றாரையும் வெறுத்து என் ஒருவனையே நம்பி வந்த இவளின் எண்ணங்களைப் பாழ் செய்ய ஆரம்பித்து விட்டேனே, பாவி'' என்று என்னென்னவோ எண்ணியது அவன் மனம்.

அவள் மடிமீதிருந்த குழந்தையை எடுத்துக் கட்டிலின் மேல் படுக்க வைத்து விட்டு 'ஈஸிசேரின்' பக்கத்தில் உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் கன்னங்களிலே காய்ந்து போயிருந்த அந்தக் கண்ணீர் அவள் அழுதிருக்கிறாள் என்பதை அவனுக்குச் சுட்டிக் காட்டுவதுபோல இருந்தது. 'நான் முரடன்' என்று முணுமுணுத்துக் கொண்டே அவள கன்னத்தை லேசாக வருடினன் சாமிநாதன்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்ட அவளை அப்படியே அணைத்துக் கொண்டான் அவன்.

''சந்திரா, என்னை மன்னித்து விடு. இந்தப் பூப்போன்ற கன்னங்களை இந்த முரட்டுக் கையால் அடித்து விட்டேனே நான் பாவி! இனி நான் 'ரேஸு'க்கே போகமாட்டேன். என்னை மன்னிப்பாயா, சந்திரா'' என்று சிறு குழந்தை போலத் தேம்பிக் கொண்டே கேட்டான் சாமிநாதன்.

"மன்னிப்பதா! 'ரேஸு'க்கு நீங்கள் போகாதிருந்தாலே போதும். 'ரேஸி'ல் போய்த் தானு பணம் சம்பாதிக்க வேண்டும்" என்று சிறு குழந்தை போலவே பேசினுள் சந்திராவும்.

"சந்திரா! 'ரேஸு'க்குப் போய் பணம் சம்பாதிக்க நினைப்பது சுத்தப் பைத்தியக் காரத்தனம் என்பதை இன்று தான் திர்க்கமாகத் தெரிந்து கொண்டேன். இருந்தாலும் இந்தப் பாழய்ப்போன'ரேஸி'ன் காரணமாக நம்மிடை எழுந்த இந்தச் சிறு சச்சரவு நமது அன்பை அதிகப்படுத்துவ தாக இருக்கட்டும். சந்திரா! கன்னம் வலிக்கிறதா?" என்று அன்போடு கேட் டான் அவன்.

"வலிக்கலே; தமிழைப்போல இனிக்குது. அதெல்லாம் இருக்கட்டும். இனி நீங்கள் 'ரேஸு'க்குப் போகமாட்டீர் களே!"

"சந்திரா! சத்தியமாக நான்........."

"நிறுத்துங்கோ. சத்தியத் தையும் சாமியையும் சொல்லித் தானே என்னை இத்தனைநாளா ஏமாத்தினீங்க. இப்பவும்......"

"இல்லே சந்திரா! நம் அன் பின் மேல் ஆணையாகச் சொல் கிறேன். இன்றையிலிருந்து 'ரேஸை'ப் பற்றி நினைப்பது கூட இல்லே. போதுமா!"


"அப்படியானுல் வாங்கோ!" என்ருள் அவள்.

"எங்கே?" என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

அவளும் சிரித்தாள்.

ஒரே வழி!

-இளமைப்பித்தன்-



'குளிக்கரை' ரயில் நிலையத்திற்குள் வெகு வேகமாக வந்து நுழைந்தார் குப்புசாமிப் பிள்ளை. அன்று கூட்டம் அவ்வளவு அதிகமாக இல்லை. வழக்கம்போல 'பி. எச். எஸ்' என்று அந்த வட்டாரத்து மாணவர்களால் சுருக்கமாக அழைக்கப்படுவதும், திருவாரூரில் கமலாலயம் தென்கரை மீது கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நின்று கொண்டிருப்பதுமான 'போர்டு ஹைஸ்கூலுக்கு'ப் படிக்கச் செல்லும் மாணவர்கள்தாம் அங்குமிங்குமாகப் பிளாட்பாரத்தின் மேல் உலாவிக்கொண்டிருந்தார்கள்.

வண்டி கால்மணி நேரம் தாமதமாகத் தஞ்சாவூரிலிருந்து வந்துகொண்டிருக்கிற தென்பதைப் 'பாயிண்ட்ஸ்மேன்' மூலமாகப் புலன் விசாரித்த பிறகு பிள்ளை அங்கே கிடந்த பலகையின் மீது உட்கார்ந்தார்.

ஸ்டேஷன் மாஸ்டர் இருக்கும் அறையின் ஓரமாக இரண்டு மாணவிகள், கையில் போஜனப் பாத்திரத்தைத் தாங்கியவண்ணம் ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

மடிப்புக் கலையாத சட்டையின் காலர்களைத் தூக்கிவிட்டுக்கொண்டு ஒரு கையில் புத்தகங்களும், மறு கையில் 'சிகரெட்டு'மாக உல்லாச நடை போடும் இளவட்டங்களைப் பார்த்ததும் அவருக்குக் கோபம் 'பொசு பொசு'வென்று புகைந்துகொண்டு வந்தது!. 'இதுகளெல்லாம் எங்கே உருப்பட்டு முன்னுக்குவரப்போதுக' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்!

'சாமி! காலில்லாத முடவன், காலணா இருந்தாப் போடுங்க தருமராசா'' என்று ஓர் பிச்சைக்காரன் பிள்ளைக்கு எதிரில் வந்து பல்லைக் காட்டினான்.

மடியிலிருந்த வெற்றிலைக் கொட்டானை எடுத்துப் பிரித்தார்; அதுதான் அவருடைய 'மணிபர்ஸ்'; ஏறக் குறைய

ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அவ்வ அது அவருடன் உறவு கொண்டாடி வந்திருக்கிறது. அதற்குள் கிடந்த காலணு நாணயத்தை எடுத்துப் பிச்சைக்காரனிடத்தில் கொடுத்தார்.

"தருமம் தலை காக்கும்" என்ற நீதி வாக்கியத்தைச் சொல்லிவிட்டு நகர்ந்தான் அவன்!

'ஏற்பது இகழ்ச்சி' என்ற எதிர்வாக்கியத்தை அவர் புரிந்துகொள்ளாமல் இல்லை. என்றாலும் கோயில் வாகனமான காலில்லாத காளைக்கு 'நிதி' 'கைங்கரியம்' என்ற பெயர்களால் கௌரவமாகப் பிச்சையெடுக்கும் மனிதர்களை விட 'ஒற்றைக் காலுடன்' நடமாடும் மனிதனுக்குத் தான் செய்த காலணு தருமத் திருப்பணி எவ்வளவோ மேல்தான் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக்கொண்டார்!

"சார், 'மாட்ச் பாக்ஸ்' இருக்கா?" என்று ஒரு குரல் பின்புறமிருந்து தொடரவே திரும்பிப்பார்த்தார் குப்புசாமி!

ஒரு மாணவன் கையில் சிகரெட்டுடன் நின்று கொண்டிருந்தான்.

அழகாக வாரிவிடப்பட்ட கிராப்புத் தலை; ஆங்கில மாடலில் உடை; முகத்திலே வேணுமென்றே வரவழைத்துக் கொண்ட புன்சிரிப்பு; மாணவிகளின்மேல் பட்டும்படாததுமாக விழுந்து திரும்பிக்கொண்டிருக்கும் கண்கள்.

"என்ன தம்பி கேக்கிறீங்க?" என்றார் அவர். உண்மையாகவே அவருக்கு ஆங்கிலம் தெரியாது! அதற்காக அவர் வருந்தியதும் இல்லை! ஏனென்றால் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் கொண்ட 'மெஜாரிட்டி'க்கட்சியில் அவரும் ஒருவராக அடங்கி யிருந்ததுதான் காரணம்!

"மாட்ச் பாக்ஸ்" என்றான் அவன்.

"அப்படின்னா? தமிழ்லே தான் கேளுங்களேன்" என்று தாய்மொழிப் பாதைக்கு அவனை இழுத்தார்!

"ஓ! ஐ ஆம் சாரி! தீப் பெட்டி கேட்டேன்" மாணவனுடைய 'தமிழாக்கம்' அவருடைய மண்டையில் அடித்ததைப்போலிருந்தது. திடீரென்று கோபத்தால் முகம் விரிய "ஏந்தம்பி! உன் வயசென்ன, என் வயசு என்ன, எங்கிட்டே வந்தாத தீப்பெட்டிக் கேக்கிறது? கொஞ்சங்கூட மட்டு மரியாதை இல்லாமப் போயிட்டுதே" என்று குரலில் கடுமையை ஏற்றிக் கொண்டே போனார்! இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த பெண்கள் கல, கல வென்று சிரித்துவிட்டார்கள்!

"சுத்தக் கண்ட்ரி மாடல் கிட்டேபோய்த் தீப்பெட்டி கேட்டேனே, நான் ஒரு முட்டாள்" என்று சொல்லிக்கொண்டே வேறு புறமாகப் போய்ச் சேர்ந்தான் அவன்!

குப்புசாமிப் பிள்ளை வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு வெற்றிலைக் கொட்டானைக் கையிலெடுத்தார்.

"என்ன பிள்ளைவாள்,சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார் ஸ்டேஷன் மாஸ்டர்! இடது புற அக்குளில் சிவப்புப் பச்

சைக்கொடிச்சுருணையும், வலது கையில் 'சாவி வைக்கும் பிரம்பு வளையமும்' அவருக்குத் துணையாயிருந்தன!

"சௌக்கியந்தான்" என்றார் சுருக்கமாக!

அப்பொழுதெல்லாம் ரயில்வேத் தொழிலாளர்களுக்கு'உணவு தானியக்கடை' கிடையாதாகையால், ஸ்டேஷன் மாஸ்டர் பிள்ளையின் மண்டிக் கடையில்தான பற்று வரவு வைத்திருந்தார்!

"சாயங்காலமா வரலாம்னு நெனைச்சேன். வீட்டில் புளி இல்லேன்னு ரகளை",

"நயமான புளியாத் தாரேன்"

"கொஞ்சம் புகையிலையைத் தள்ளுங்க; வண்டி வரப்போகுது" என்று கையேந்தினார் குளிக்கரை ஸ்டேஷனின் ஏகச்சக்ராதிபதி!

"பிரம்மா புகையிலை, போடுங்க"

சிவபுரியை ஆளுக்குக்கொஞ்சமாக எடுத்து வாய்க்குள் தளளிக்கொண்டார்கள்!

சிறிது நேரத்தில் வண்டி வந்து நின்றது!

எது எங்கே தவறினாலும் கடைசியிலுள்ள 'கார்டுவாணி'ல் இருக்கும் 'கார்டுஐயா' வுக்குச் சலாம் போடத் தவற மாட்டார் பிள்ளை! அந்த 'ஐயா' யாராக இருந்தபோதிலும் சரிதான்! பழக்கப்பட்ட ஆசாமியாக இருந்தால் கார்டு வானிலேயே ஏறிக்கொள்ளுவார்! அன்று யாரோ ஒரு புது ஆசாமி வந்ததனால் வெறும் 'சலாம்' மட்டும்போட்டு விட்டுப் பக்கத்துப் பெட்டியில் ஏறி உட்கார்ந்தார்!

ஸ்டேஷன் மாஸ்டர் 'பிகில்' கொடுத்துப் பச்சைக் கொடியைக் காட்டினார்!

வண்டி நகர்ந்தது!

"பிள்ளைவாள் சாயங்காலம் வாரப்போ, ஒரு வீசை புளியை மறந்திடாதிங்க" என்று ஸ்டேஷன் மாஸ்டர் போட்ட சப்தமும் "ஆகா! நல்லாருக்கு மறந்திடுவேனா!" என்று பிள்ளை பதில் சப்தமும் ரயில் வண்டியின் 'தடக் - தடக்' ஒலியோடு இணைந்து ஒடுங்கின.

வண்டிக்குள் சுமாரான கூட்டம்! நாகூர் ஆண்டவருக்கு 'பாத்தியா ஓத' வேண்டிக் கொண்ட அடியார்கள் 'தர்கா' வைப்பற்றிச் 'சரடு'விட்டுக் கொண்டிருந்தார்கள். இதெல்லாம் எத்தனையோ ஆண்டுகளாகக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போன பேச்சாகையால் அதை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை!

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினரில் யானொருவனன்றோ........."

ரயில் பிச்சைக்காரன் வெகு உருக்கமாகப் பாடிக்கொண்டே பிள்ளையின் பக்கமாக நெருங்கினான்.

"வாழையடி வாழையாத் தான் வாரீங்க, இதைப் பாட்டாக வேறே பாடிக்காட்டணுமோ" என்று முணுமுணுத்துவிட்டு வாயிலிருந்த வெற்றிலைக் குழம்பை வெளியே உமிழ்ந்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு சுகமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்!

திருவாரூர்ச் சந்திப்பை வண்டி வெகுவேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது!

"ஐயா!"

"போடா, வேலையத்தவனு களா, வேறே எங்கேயாவது போய்க் கேளு, காலணாக்கூடக் கிடையாது" பிள்ளை கண்களை மூடியபடியே பேசினார்.

"கொஞ்சம் கண்ணைத்திறங்க, கல்நார் பற்பொடி வேணுமா?"

பிள்ளைக்கு மின்சாரக் கம்பியைத் தொட்டமாதிரி இருந்தது!

"மன்னிக்கணும், நான் பிச்சைக்காரனுக்குமனு நெனெச்சுச் சொல்லிட்டேன்"

"பரவாயில்லே! ஒரு பொட்டலம் காலணாத்தான் விலே. ரெண்டு தரட்டுமா?" என்று பற்பொடி விற்பனையாளரும், தயாரிப்பாளருமான 'அவர்' குப்புசாமிப்பிள்ளையை மடக்கினார்:

"'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' ங்கிற பழமொழியை நான் நம்புகிறவன் என்றாலும் தினசரி வேப்பங் குச்சிதான் உபயோகிக்கிறது வழக்கம்" என்று வளைந்து கொடுத்துத் தப்பினார் அவர்.

'பலிக்காது' என்று தெரிந்ததும் பற்பொடி வியாபாரி நகர்ந்தார்!

'கதவுகளைச் சரியானபடி மூடாவிட்டால் பிரயாணிகள் கீழே விழ ஏதுவாகும்' என்ற ரயில்வேக்காரர்களின் எச்சரிக்கைப் பலகையின் மேல் விரல் நுனியில் காய்ந்திருந்த மீத சுண்ணும்பைத் தடவி விட்டுக் கதவருகில் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றார்!

திருவாரூர்ச் சந்திப்பிலுள்ள 'அறந்தாங்கி லயன்மீது' போய் ஒன்றியது மனம். இதே நேரத்திற்குத்தான் அந்த வண்டியும் வரும்! அதிலிருந்து யாராவது யாழ்ப்பாணத்து ஆசாமிகள் வந்து இறங்குவார்கள். அவர்களை 'வெகுநாசுக்காக வலேவீசி' 'பற்றுவரவு'ச் சிறைக்குள் சிக்க வைக்கும் திறமை பிள்ளையவர்களுக்குப் 'பழக்கப் பட்டகலே'. ஆதலால் அன்றும் வழக்கம்போலப் பார்வையைப் பாயவிட்டார்!

கரும் புகை வளையங்களைக் கக்கிக் கொண்டு வரவேண்டிய வண்டி கால் மணி நேரத்திற்கு முன்னதாகவே சென்று விட்ட படியால் அங்கே வெறும்வெளி தான் தென்பட்டது!

வண்டி பேரிரைச்சலுடன் திருவாரூர்ச் சந்திப்பில் வந்து நின்றது! திரளான கூட்டம். ஆட்கள் ஏறுவதற்கு முன்பே வண்டிக்குள் 'தொப்' தொப் பென்று படுக்கையும் பெட்டிகளுமாகப் போய் விழுந்து காலியாயிருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டன! அவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு கீழே இறங்கினார் குப்புசாமிப் பிள்ளை!

'ஓவர்பிரிட்ஜ்' படிகளை எல்லாம கடந்து வெளியில் வந்ததும் முதன் முதலாக அவர் கண்களுக்குத் தட்டுப் பட்டது 'மடப்புறம் முதலியாரின்' பூரணிஜோடி மாடுகள பூட்டிய வில் வண்டிதான்!

மேற்படி முதலியாரிடம்தான் பிள்ளை 'லேவாதேவி' செய்து கொண்டிருந்தார். ஆயிரம, இரண்டாயிர மென்று பணத்தைப் புரட்டும் சமயங்களிலெல்லாம் முதலியாரின் தயவு பிள்ளைக்கு அடிக்கடி தேவைப்படுவது உண்டு! எப்பொழுதோ வாங்கிய 'பெரும் தொகை' என்ன காரணத்தினலோ

அடைபடாமல் கிடந்து விட்டது!

வண்டிக்குள் உட்கார்ந்திருந்த முதலியாருக்கு ஒரு பெரிய 'கும்பிடு' போட்டார்! அவருடைய குணம் பிள்ளைக்குத் தெரியாததல்ல! மடப்புறம் முதலியா ரென்றால் 'கறார் பேர் வழி' என்பதுதான் அர்த்தம். லேவாதேவியில், வடநாட்டுக்காரனை யெல்லாம் 'பீட்' காண்பித்து விடுவார்! கணக்கிலும் சரி, பேச்சிலும்சரி!

"என்ன பிள்ளைவாள், நம்ம 'தொகை' யை இந்தத்தடவை ஏன் இப்படி முடக்கிட் டீங்க?" என்று கேட்டார் முதலியார்!

"வியாபாரம் ரொம்ப மந்தமா இருக்குதுங்க, இல்லேன்னா இவ்வளவு நாளா ஆகும்?"

"அது சரிய்யா' வட்டி வேறேல்லே வேகமா ஏறிக்கிட்டே வருது, அதையாவது கட்டித் தொலைக்கப் படாதா?"

"இந்த மாதம் அறுவடை முடிந்ததும் முதல் பணம் உங்களதுதான், சந்தேகமே வேணாம்"

"ஏதோ கடைசியாச் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன், என் போக்குத்தான் உங்களுக்கு நல்லாத் தெரியும்"

"கவலையை விடுங்க, பணம் தானாக வந்து சேர்ந்திடும்"

வில் வண்டியை வழியனுப்பி வைத்து விட்டு யோசனையிலாழ்ந்த வண்ண மாகவே கடைக்குப் போய்ச் சேர்ந்தார் குப்புச்சாமிப்பிள்ளை. முகத்தில் எஞ்சியிருந்த 'களை'யையும் முதலியார் சுட்டுக் கருக்கி விட்டார். கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தியபடி பெட்டியடியில் உட்கார்ந்தார். கடைப் பையன் வெங்காய மூட்டைக்கு முதுகை முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தான். கணக்கப் பிள்ளை கத்திபடாத முகத்தை உள்ளங்கையினால் இரண்டு தேய் தேய்த்து விட்டுக் கணக்கெழுதிக் கொண்டிருந்தார்.

கடந்த ஒருவருடமாகக் கடையில் வியாபாரமே இல்லை. பற்றுவரவுத் தெய்வங்கள் உண்மைக் கடவுளர்களாகவே மாறிவிட்டார்கள். அதாவது பிள்ளையின் கண்களில் தட்டுப்படாமல் தலைமறைவாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

வரவேண்டிய தொகைகளெல்லாம் 'முடக்குவாதம்' பிடித்துப் போய்க்கிடந்தன. இதே நிலையில் பொழுதை ஓட்டிக்கொண்டிருந்தால் 'ஒரு மாசத்திற்குள் மஞ்சள் கடுதாசி' நீட்டுவதைத் தவிர வேறு வழியே இல்லை. போதாக் குறைக்குக் குடும்பத் தொல்லைகள்! பெரிய பையனுக்கு ஏதாவது வேலை வாங்கித் தரவேணும். வீட்டில் அடைபட்டுக்கிடக்கும் பெண்ணுக்கு நல்ல 'வரனை'ப் பார்த்து ஒரு வழி செய்தாகணும், சின்னப் பயலேயும் ஒரு விதமாக முன்னுக்குக்கொண்டு வந்து விடணும், இவ்வளவுக்கும் மேலாக முதலியாரின் கடன் பளு! நிலத்தையும், கடையையும விற்றுத் தீர்த்தால் கூடமுதலியாருக்குத் தரவேண்டிய முதலுக்குத் தான் சரிக்கட்டி வரும். பிறகு 'வட்டி' என்னுவது?

குளிக்கரையிலிருக்கும் 'வீடு' ஒன்று பாக்கி!

அதையும் விற்று விட்டால்......?

'குளிக்கரைப்பிள்ளை'யென்று பேர்வாங்கிய குப்புசாமிப்பிள்ளை இனிமேல் "இன்சால் வெண்ட் பேர்வழி" யாகி விடுவார். இரண்டு 'பெரிய மனிதர்களுக்கு' முன்னால் அவரும் ஒரு 'பெரிய மனிதராக'—முதலாளியாக—ஏன் மிராசுதாரராகக் கூட வரமுடியாது.

குப்புசாமிப் பிள்ளையின் மனத்திலே இந்த விதமான எண்ணங்களெல்லாம் மின்னலும் இடியுமாக மாறி உடலின் மேல் வியர்வைத்துளிகளாக முத்துக்கோர்த்துக் கம்பியிட்டு வழிந்தோடின!

அடுத்தவாரமே ஒரு அபூர்வமான முறையை வெகு ரகசியமாகக் கையாண்டார் குப்புசாமி பிள்ளை. வீட்டையும், நிலத்தையும், தன் மனைவியின் பேரில் எழுதிவைத்தார். கடன்காரர்களுக்கு அடைக்கலம் தரும் பிரஞ்சு அரசாங்கத்தின் வசமுள்ள 'காரைக்காலுக்கு' விட்டார் 'சவாரி'!

இனிமேல் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் 'வாரண்டும்—ஜப்தியும்' அவரை என்ன செய்து விட முடியும்? வாழ்க்கையே அவருக்கு ஒரு விளங்காத புதிராகத் தோன்றிய பொழுது. அவரும் வாழ்க்கைக்கு ஓர் புதிராக மாறியதில் என்ன தவறு இருக்கிறது? அவனன்றி ஓர் அணுவும் அசையுமோ? ●

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

......பெரிய பொங்கல் விருந்து இது. மிகுந்த முயற்சியெடுத்து இதனை ஆக்கியிருக்கின்றனரென்பது தெளிவாகிறது. இதிலுள்ள வேடிக்கைப் படங்கள் நகைச்சுவையைத் தருகின்றன. பொன்னி தன் இளம் பருவத்திலேயே இப்படிப்பட்ட திறமையான மலரை அளித்திருப்பது பெருமைப்படக்கூடியது......

"குமரன்" 1949 ஜனவரி

புதுக்கோட்டையிலிருந்து வெளியாகும் 'பொன்னி' மாதப்பத்திரிகையின் பொங்கல் மலர் கண்ணைக்கவரும் முறையில் அமைந்திருக்கிறது ......தமிழ்ப்பத்திரிகை மலர்த் துறையில் 'பொன்னி' அதன் உருவசாதனையை உத்தேசித்து, இப்பொங்கல் மலரில் நல்ல வெற்றிபெற்றிருக்கிறது என்றே கூறவேண்டும்.

"சிவாஜி" 23—1—49

இவ்வாண்டு பொங்கல் நன்னாளை ஒட்டி, பொன்னி மல்லாளும் தன்னியல்புக் கேற்பத் தமிழ்ப் பொங்கலாக்கி அளித்திருக்கின்றாள்; அழகிய ஆர்ட்தாளில் கருத்தைக் கிளரும் எழுத்தோவியங்களுடனும், கண்ணைக்கவரும் மூவண்ணப் படங்களுடனும் ......திராவிடக் கழகத்தினரும் சிறந்த மலரை வெளியிடுவர் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

"குடியரசு" 29—1—49

தாயன்பு

-ராம சுப்பிரமணியன்-



எண்ணெய் தேய்த்துச் சீவிவிட்டு
என்னை அழகு பார்த்திடுவாள்!
'கண்ணே! முத்தே!' என்றுகொஞ்சிக்
கட்டித் தங்க நகையணிவாள்!
எனக்கு நோயும் வந்திடினே
இதயம் புழுங்கி நொந்திடுவாள்!
தனக்கு வந்த தெனவெண்ணித்
தக்க மருந்து கொடுத்திடுவாள்!
மடியில் வைத்து முத்தமிட்டு
மகிழ்ந்து காத்த அன்னையடா!
படியில் மறக்க முடியாத
பாலைத்தந்த அன்னையடா!
இடுப்பில் எடுக்கி அன்புடனே
என்னை வளர்த்த அன்னையடா!
படிப்பில் நல்ல தேர்ச்சிபெறப்
பாது காக்கும் அன்னையடா!
தெருவில் நானும் விளையாடித்
திரும்பி வரும்போ தெதிர்கொண்டு
தருவாள் நல்ல தின்பண்டம்!
தாவிக் குதித்தே அதைப்பெறுவேன்!
தோழ ருக்கும் கொடுத்திடுவேன்!
சுவைத்து மகிழ்ந்து தின்றிடுவேன்!
வாழும் வாழ்வில் தாயன்பை
மறவேன்! நானும் மறவேனே!

கலையுலகம்

நல்லதம்பி

"அறிஞர் அண்ணாத்துரை கதை, வசனம் - நகைச் சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் நடிப்பது" என்றவுடனேயே "நல்லதம்பி" சினிமாத் துறையில் நல்ல வெற்றியளிக்கும் படமாக வெளிவருமென்று எண்ணியிருந்தேன்; உருவாகித் திரையில் ஓடும் படத்தைப் பார்த்தவுடன் அந்த எண்ணம் உறுதிப்பட்டது.

ஜமீன் ஒழிப்பின் பயனை நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலேயே கதை தீட்டப்பட்டுச் சினிமாவாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கிராம சீர்திருத்தத்திலும் மக்கள் முன்னேற்றத்திலும் பெரும் பங்கு கொள்ளும் "நல்லதம்பி" எதிர்பாராத விதத்தில் ஜமீன்தாராவதும், ஜமீன்தாராகப் பதவி யேற்றபின்னும் "நல்ல தம்பி" நல்ல தம்பியாகவே நடக்க எண்ணுவதும், ஜமீன் நிலங்களை உழவர்கட்கு உரிமையாக்குவதும்தான் நிகழ்ச்சிகள். காலஞ் சென்ற ஜமீன்தாரின் செல்வப் புதல்வி புஷ்பா இந்த மாறுதல்களுக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ள முடியாது தவிப்பதும் அந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்க எண்ணி ஜமீன் மானேஜர் பூபதி, 'நல்ல தம்பி' மீது வெறுப்பேற்படும்படி அவளிடம் அடிக்கடி புறங் கூறுவதும், புஷ்பா, பூபதி ஆட்டும் பம்பரமாக மாறி, இருவரும் 'நல்லதம்பி'க்கு இடையூறு தருவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பதும் கதைப் போக்கிற்கு விறுவிறுப்பைத் தருகின்றன. நிலைமை மோசமாகி விடுமென்றஞ்சி பூபதி நல்லதம்பிக்கு ஜமீன் உரிமை யில்லையென்றும், ராணிபுஷ்பாவுக்கு ஜமீனை உரிமையாக்க வேண்டுமென்றும், நீதி மன்றத்தில் வழக்குத் தொடர, அங்கும் நல்லதம்பியின் நேர்மை ஜமீன் குடிகளின் சாட்சியத்தால் தெரிய வந்து தீர்ப்பு நல்லதம்பிக்குச் சாதகமாகக் கூறப்படுகிறது. இதுதான் கதை.

கிராம நாடகசபையில் கிருஷ்ணன்—மதுரம் கோமாளி—கோமாளிச்சியாக வந்து இந்திரலோகத்தில் மதுவிலக்குப் பெருமை, தமிழகத்தின் சிறப்பு முதலியவற்றை விளக்குகின்ற பகுதியும், அங்கே கால மாறுதலை விளக்குகின்ற முறையில் பாடும் பாடலும், செஞ்சிக்கோட்டைப் புதையலை ஆசைகாட்டி ராணியம்மாவின் தகப்பனை 'அன்னதானம்' செய்யவைக்கும் நிகழ்ச்சியும், 'இந்தனூர்'

காலட்சேபமும் அறிவுக்கு விருந்தாகப் படத்தில் சேர்க்கப் பட்டுள்ளன.

அறிஞர் அண்ணாத்துரையின் படைப்பு என்றாலே, கதை வெறும் பொழுது போக்காக மட்டுமிராது, பயனளிப்பதாகவுமிருக்கு மென்பது திண்ணம்; அதற்கேற்பக் கருத்துப் பொலிவு நிறைந்த உரையாடல்கள் படம் முற்றும் தூவப்பட்டிருக்கின்றன.

கிருஷ்ணன்—மதுரம்—இந்த ஜோடியைக் கண்டாலே போதும் தமிழ் மக்களுக்குச் சிரிப்புத் தானாக வரும். "நல்ல தம்பி" படத்தில் பெரும்பாலும் எல்லாக் காட்சிகளிலும் அவர்கள் வருகிறார்களென்றால், சினிமாப் பார்க்கச் சென்றவர்கள் ஆரம்பம் முதல் கடைசி வரையில் சிரித்துக் கொண்டே தான் இருக்கவேண்டுமென்றாகிறது. நகைச்சுவையரசர் கிருஷ்ணன் இப்படம் மூலம் 'தமக்கிணை யாருமில்லை' என்ற பெருமையைத் தட்டிக் கொண்டு போய்விட்டார் என்றே கூறவேண்டும்.

'சினிமா, பார்ப்பவர்கள் நடத்தையைப் பாழாக்கும் சாதனம்' என்று கருதும்படியாக இருந்து வந்த நிலையை அடியோடு மாற்றி விட்டது "நல்ல தம்பி". "நல்ல தம்பி"யைப் பார்ப்பவர்கள் எத்தனையோ உண்மைகளைத் தெரிந்து கொண்டு வெளியே வருகிறார்கள்; ஜமீன்தார்களின் படாடோப வாழ்வு, அவர்களை நடுமையமாக வைத்து நிகழும் அக்கிரமங்கள், மக்களின் மூட நம்பிக்கையை முதலாக வைத்துப் பிழைக்கும் எத்தர்களின் திருவிளையாடல்கள், இவற்றை சித்தரித்துக் காட்டுவதோடு கல்வியின் அவசியம், குடியொழிப்பின் பயன், ஜமீன் ஒழிப்பினால் உழவர்களிடம் மல்கும் செழிப்பு, இவற்றையும் விளங்க வைக்கிறது "நல்ல தம்பி". சமுதாயத்திலே புதியதொரு மனமாறுதலை ஏற்படுத்திவிடும் அளவுக்கு அப்படத்தின் ஒவ்வொரு அம்சமும் அமைந்திருக்கின்றது.

படப்பிடிப்பிலும், கலை நுணுக்கங்களிலும் பல புதிய முறைகளைக் கையாண்டுள்ளனர். விறுவிறுப்பாகக் கதையையமைத்து, வேடிக்கையாகயிருக்கும்படி வசனமெழுதி புரட்சிகரமான கருத்துக்களைப் புகுத்தியுள்ள முறையே இத்துறைக்குப் புதியதாகும்.

கதைக் கேற்ற நடிகர்கள்; நடிகர்களுக்கேற்ற கதையமைப்பு. கிருஷ்ணன், மதுரம், பானுமதி, சகஸ்ரநாமம் ஆகியோர் தத்தம் பாகங்களைக் கச்சிதமாக நடித்திருக்கின்றனர்; பாடல்கள் கருத்துச் செறிவுடன் எழுதப்பட்டிருக்கின்றன. சில குறைகள் உண்டெனினும் "நல்லதம்பி"யின் சிறப்பான பகுதி அதனை மறக்கச் செய்து விடுகிறது. நம் சென்னை அரசினர் தம் திட்டமாகக் கொண்டிருக்கும் மதுவிலக்கு, ஜமீன் ஒழிப்பு ஆகிய இரண்டு முக்கிய சீர்திருத்தங்களுக்குத் தக்கதோர் பிரசாரப்படமாய் அமைந்திருப்பதும்; அதே சமயத்தில் மக்களின் கருத்தைக்கவரும் சிறந்த பொழுது போக்குப் படமாய் விளங்குவதுமே "நல்லதம்பி"யின் வெற்றிக்குச் சான்று பகரும்.

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

1. நல்ல பிள்ளை!

நாடோடி வழிப்போக்கனாகத் திரியும் நான் யாரென்று அறிந்து கொள்ள உங்களுக்கு மிகவும் ஆவல் இருக்கும். அந்த ஆவலை முதலில் பூர்த்திசெய்து விடுவதென்று முடிவு செய்து விட்டேன்.

நான் ஒரு நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவன். ஜாதி — சாதியாவது, மண்ணாங்கட்டியாவது அதைப் பற்றி நான் என்னுடைய சிறு வயதிலேயே கருதினதில்லை.

என் தகப்பனார் படித்தவர்; பட்டம் பெற்றவருங்கூட. சம்பாதிப்பது சாப்பிடுவதற்காக என்ற பெருநோக்குடையவர். இதன் பயனாக நாடோறும் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அப்பா நாலைந்து நண்பர்கள் சூழவே வருவார். வேளைக்கு எங்கள் வீட்டில் மூன்று பானைச் சோறு வேகும். வாழ்ந்து கெட்ட வகையருக்களில் முதல் நம்பர் என் தந்தை. அவர் இறக்கும் பொழுது எனக்கு விட்டுச் சென்ற ஆஸ்தி—அவருடைய ஆசிர்வாதங்கள் தாம்.

உலகத்தை ஒரு கண்ணாலேயே பார்த்த என் தகப்பனார் மதவிஷயங்களைப்பற்றி அதிகமாகப் போதித்தார். "அறஞ்செய விரும்பு" என்று சொல்லிக்கொடுத்தார். ஆனால் அறஞ் செய்வதற்குத் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பதைச் சொல்லித் தரவில்லை.

பொய்யும் புளுகும் நிறைந்த புராணக் கதைகளை அவர் உபதேசிக்கும் பொழுதும், புத்தி தடுமாறிக்கூட, அவர் சொல்வதை எதிர்த்துப் பேசாத காரணத்தால் அவரிடம் நான் 'நல்ல பிள்ளை' என்ற பெயரை வாங்க முடிந்தது.

நான் காலேஜில் சேர்ந்து படிக்க ஆரம்பித்ததும், என்னைப் பற்றிக் கலெக்டர் துரையாகவே என் அப்பா கனவு கண்டார். ஆனாலும் முதல் வகுப்பிலேயே மூன்று ஆண்டு தங்குவேனென்று அவர் கருதவேயில்லை. ஏதோ ஒரு வழியாகக் கல்லூரி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வெளியேறும் போது கூடப் பிரின்ஸ்பாலிடம் 'நல்லபிள்ளை' என்ற பட்டத்தையே பெற்றேன்.

தந்தையும் இறந்தார். கல்லூரி வாழ்வும் முடிந்தது. எனது இருபதாவது வயதிலேயே நான் வாழ்க்கைக் கடலிலே தனியாகத் தள்ளப்பட்டேன். வறுமை என்னும் சுழலில் அகப்பட்டுத் தத்தளித்தேன். பசி என்னும் சுறுமீன் என்னைக் கடிக்க ஆரம்பித்தது. கடைசியில் எனது நண்பர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களிடம் சென்றேன்.

உலகத்தில், ஆபத்தில் உதவாத நண்பர்கள் தாம் அதிகமாயிற்றே!

கல்லூரியில் படித்த நண்பன். என்னிடம் பணம் நிறைய இருக்கும்போதெல்லாம் கடன் தர முன்வந்தவன்—அவனிடம் சென்றேன். ரூபாய் 200 கடனாகத் தரும்படி கேட்டேன். அவன் என்னை ஏற இறங்கப் பார்த்தான். முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டே, "இப்போது உனக்கு அவசியம் பணம்வேண்டுமா?' என்ருன்.

"ஆம்" என்றேன்.

"இதோ பார்! இப்பொழுது உனக்குப் பணம் தேவையாயிருந்தால், பின்பு, பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் பொழுதும் பணம் தேவையாயிருக்கும். ஆதலால் இப்பொழுது நீ கடன் வாங்காவிட்டால் பின்னுல் நீ திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லாம் உனது நன்மைக்குத் தான்" என்று சொல்லி வெறுங் கையை விரித்து விட்டான்.

மனம் ஒடிந்த நான் கடைசியில் ஒருபணக்காரனின் குமாஸ்தாவாக அமர்ந்தேன். அப்பொழுதுதான் உம்மைப் போன்ற உல்லாசங்கள் பலரைக் கண்டேன். அது மட்டுமல்ல. உல்லாசங்களின் மேல் மாடியில் இருந்து கொண்டே கீழே நடமாடும் உபவாசங்களையும் கண்டேன்.

என்மனம் சிதறியது. உள்ளம் உடைந்தது. உல்லாசங்களின் உடை வெண்மையாகயிருந்தது. உள்ளம் அழுக்கடைந்திருந்தது. உபவாசங்களின் உடை அழுக்குப் பிடித்திருந்தது, ஆனல் உள்ளம் வெளுத்திருந்தது. முகமும் அப்படித்தான்.

வரவு செலவுக் கணக்கை எழுதும்போது என் வயிறு எரியும். எரிந்து என்ன பயன்? வாய் திறந்தால் வறுமை என்னை எரித்துவிடத் தயாராயிருந்தது. வீட்டில் வேலை செய்வோருக்குச் சம்பளம் அணுக்கலத்துக்கு மேல் போகாது.

"மகளுக்கு.......வரதட்சணைக்காக" என்று பல்லைக்காட்டிக் கொண்டு வரும் பரமசிவக் குருக்களுக்கு, பணங் கொடுப்பார், ஆயிரக்கணக்காக.

"தன் மனைவிக்குக் காய்ச்சல்" என்று சொல்லி மருந்து வாங்கக் காசு கேட்கும் மருதப்பனுக்கும் கொடுப்பார், புளிய மரத்தில் கட்டிவைத்து அடிக்கணக்காக.

கோயில் குருக்கள் மனைவியுடன் கொஞ்சுவார் இரவிலே-குருக்கள் பெறுவார் ஆயிரக் கணக்கில்.


இப்படி உம்மைப் போன்ற உல்லாசங்களின் பொல்லாங்குகளைக் கவனித்தேன். மெல்லவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை. "இம்சைக்கு ஆளான இலட்சிய வாதி" யைப் போல் ஆகிவிட்டேன். நோய்வாய்ப் பட்டேன். நோய்க்குக் காரணம் உடல் தளர்ச்சியல்ல, உள்ளத்தளர்ச்சி— "நல்ல பிள்ளை" என்ற நற்சான்றேடு நான்கு மாதச் சம்பளத்தைக் கொடுத்தார். இனி என் வேலை எல்லாம், உம்மைப் போன்ற உல்லாசங்களுக்கு, ஏழைபடும் பாட்டை எடுத்துரைப்பது தான். அந்தவகையில் உமது உள்ளத்தைமாற்ற முடியும் என்ற உறுதி எனக்கு இருக்கிறது.

வணக்கம்,
வழிப்போக்கன்.

..பொது மேடை..

சென்னை 27-1-49

மலரின் மணம் மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பது மட்டுமல்ல, சிந்தனைக்கும் சிறந்த விருந்து. ஒவ்வொரு கதையும், கட்டுரையும், கவிதையும் திராவிடர்களின் தன்மானத்தைத் தட்டியெழுப்புவது. கருத்துக்கு மெருகளித்திருக்கும் அய்யாவின் கட்டுரையும், அண்ணாவின் பொருள் நிறைந்த பொன்னெழுத்தும், கவியரசரின் கருத்து நிறைந்த கவிதையும் என்றென்றும் உள்ளத்திலே இருப்பவை. "கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார்" என்ற சிறு கதை ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்ச்சியளிக்கக்கூடியது சமூகத்தில் மட்டுமல்ல கடவுளுக்குக் கூட ஏழை — பணக்காரன் என்ற வேறுபாடு இருக்கிறது என்பதை உணர்ச்சியுடன் சித்தரித்திருப்பது மறக்க முடியாதது..........போல் வந்துவிட்டதே என்று அன்னியர்கள் பேசும் பேச்சைக் கேட்டேன். அளவற்ற மகிழ்ச்சி கொண்டேன். இந்த ஆண்டில் 'அதைப் போல' எனப்பேசுவர். அடுத்த ஆண்டிலே 'அதற்கும் மேல்' எனப் பேசுவர். அந்த நாளை ஆவலுடன் வரவேற்கிறேன்.



இரா. இலக்குமணன்

பம்பாய் 1-2-49

பொன்னி பொங்கல் மலரை அலங்கரிக்கும் பெரியார், அண்ணா, கவிஞர் கருத்துரைகள், கண்ணன் அழகப்பன் ஓவியங்கள், பாரதிதாசன் பரம்பரை; இன்னும் கருத்தைக் கவரும் கட்டுரைகள், இளம் எழுத்தாளர்கள் எழுத்தோவியங்கள் யாவும், திராவிடம் எழுச்சியின் எதிரொலி என்பது எமது எண்ணம். **—எஸ். பெரியஸ்வாமி**

திருச்செங்கோடு 4-2-49

நமது "பொன்னி" ஆரம்பமுதல் படித்துப் பயன் பெற்றுவரும் பலருள் நானும் ஒருவன் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். "பொன்னிக்கு" மூன்றாவதாண்டு தொடக்கம் கண்டு மகிழ்கின்றேன். நமது "பொன்னி"க்கு இந்நாட்டு மக்கள் மூன்றாவதாண்டில் பெரும் ஆதரவு நல்கி, அன்புடன் வளர்ப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! திராவிட இனத்தின் தனி மணியாக விளங்கும் குழந்தை பொன்னிக்கு நல்வாழ்வும் பெரும்புகழும், நல்க யாரும் தவற மாட்டார்கள் என்ற நம்பிக்கை திடமாக உண்டு.

ப. க. பழனியப்பன்

சென்னை 5-2-49

புது மலர் பூத்தது! இரத்த ஆறுகளைப் புரட்சிக் கடலில் சேர்த்துப் புதுமைக் கொந்தளிப்பில் பழமைப் படகைச் சுக்கு நூறாக்குவீர் என்றழைத்து இன்பத் திராவிடம் தன் இதய இன்னிசை நாளும் மெருகேறும் வண்ணம் பைந்தமிழ்ச்சோலை தன்னில் பவனி வரும் "பொன்னி" நல்லாள் குவி கருத்துக் குபேரர்களாம் நந்திராவிடப் பேனா வீரர்களது கை வண்ண மலர் மாலையதைத் தன் கை வண்ணம் தெரியும் வகை நமக்கீந்த இஞ்ஞான்று "தேன் கூட்"டைச் சார்ந்த "தேனீக்கள்" யாவும் "இதோ எம் கலை! எம் காவியம்!! எம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் ஓவியம்!!!" என ரீங்காரம் செய்த வண்ணமிருக்கின்றன.

"தேனீ"

திருச்சிராப்பள்ளி 3-2-49

25—1—49ந் தேதி 'பொன்னி' இதழை நேற்றுத்தான் படித்தேன். அதிலே **கண இராமநாதன் கலைக் களஞ்சியத்தைப்பற்றி** எழுதியுள்ள கட்டுரை மிக ஆழ்ந்த கருத்துக்களை யும், தமிழ் மக்களின் பெரும் ஆசைகளையும் அடக்கியதாக உள் ளது. உண்மையிலேயே, திரு. வி.க. மறைமலையடிகள், இலக்குவனர். வரதராசனர், ச. சோ. பாரதியார் அப்பாத்துரை, தேவநேயப் பாவாணர், மீனட்சிசுந்தரனர் முத லானவர்கள் கலைக்களஞ்சியத்திற் காகப் பணியாற்றத் தகுதியுடைய வர்கள். பல சாத்திர விற்பன்னர் களின் ஒத்துழைப்போடு மேலே கூறிய தமிழ்ப் பெருமக்களின் தொண்டும் கூடிக் கலைக்களஞ் சியம் வளர்ந்து உருப்பெற்ருல் 'சர்க்கரைப் பந்தரில் தேன் மாரி பெய்ததாகும்'

நா. சா. இராமநாதன்

ஆடூர் 29-1-49

பொங்கல் மலர் கவர்ச்சிகரமான தாக இருக்கிறது. உணர்ச்சி ஊட்டக்கூடியதாகவும் இருக்கிறது. இதுபோல் சிறந்த மலர் நான் இது வரை கண்டது கிடையாது. மற் றும் தலைவர் பெரியார், தளபதி அண்ணு, புரட்சிக்கவிஞர் இவர் களின் உருவப்படங்கள் சிறப்பாக வும், மலரின் எடுப்பான பகுதிகளாக வும் அமைந்திருக்கின்றன. இது போல் தாங்கள் முயற்சி குன்ருது ஆண்டு தவருமல் உயர்ந்த முறை யில் மலர் வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன். —**த. அருணுசலம்**

கூடலூர் 1-2-49

ஆகா! அவள் அழகு தான் என்னே! என் உள்ளத்தையே பறி கொடுத்து விட்டேன். பார்த்தாலே பசி தீரும். படித்தாலோ வெனில் பகல் கழிவதைக் கூறவேண்டிய தில்லை. பல அறிஞர்களின் எழுத் தோவியங்களை ஒன்று திரட்டி என்னைப் போன்றவர்கட்குச் சுவைக்கக் கொடுத்தத் தங்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றி சென்ற வருடமும் எங்கள் மடியில் உங்கள் 'பொன்னி' மலர்' தவழ்ந்தது போல், வந்து கொண்டிருக்கும் வருடங்களிலும் அவ்வாறே திகழும் என்று நம்புகிறேன். கலைச் சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டு 'பொன்னி!' —**மனேகரன்**

கருவூர் 31-1-49

'பொன்னி' பொங்கல்மலர்.........!

ஆம்! சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டவில்லை.

அதன் தோற்றம்-முன்னேற்றம், திராவிடமக்களின் முன்னேற்றத் தைக்குறிக்கும் முறையில் அமைந் திருக்கிறது. பழந்தமிழர் காதல் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகை யில் அமைந்துள்ள 'தினைப்புனத் தில்' என்ற கட்டுரை வாலிபர்களைத் தன்பால் இழுக்கிறது. மற்றும் உள்ள மத ஆராய்ச்சிக் கட்டுரை களும் கதைகளும் காலத்திற் கேற்ற கருத்துக்களை அள்ளி வீசும் பான்மையில் அமைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. மலரை வண்ணக் களஞ்சியமாக்கிய ஓவி யர்களை நாம் பாராட்டாமலிருக்க முடியாது—அவர்கள் முயற்சி வள ரட்டும். 'பொன்னி' பாய்ந்து ஓடிய இடங்கள் சிலவே. இன்னும் பாய வேண்டிய இடங்கள் பல உண்டு. 'பொன்னி' வாழ்விழந்த திராவிடத் திற்கு வாழ்வளிக்கும் வகையில் தனது வற்ரு நீரை இடையருது பாய்ச்சி வளப்படுத்த வேண்டு மென அவாவுகிறேன்.

தன மனேகரன்.

கடலூர் 17-1-49

'பொன்னி' தனது இரண்டா வது பொங்கல் ஆண்டில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கின் ருள். அவள் நன்ருக நாட்டியம் ஆடு கிருள், உணர்ச்சி ததும்ப எழுது கிருள், பகுத்தறிவை ஊட்டும் காவி யம் புனைகிருள், கண்ணிற்கு இனி மையாக ஓவியம் தீட்டுகிருள். இன் னும் தமிழ்நாட்டையே தன்னுடன் பிணைத்துக் கொண்டு முன்னேறிச் செல்கிருள். ஒவ்வொரு பக்கமும் இன்பம், இன்பம் கொள்ளை இன் பம்தான். —**மயில்**

புது எழுத்தாளர்கள்

-நா. வேத்தரசன்-

7. தகுதியற்ற கட்டுரைகள்

பல புது எழுத்தாளர் எழுதும் கட்டுரைகள், தகுதியற்றவையாக இருந்து, அவற்றில் தபால் தலைகள் இணைக்கப்பட்டிருந்தால் பத்திரிகை நிலையங்களிலிருந்து திருப்பியனுப்பிவிடுகிறார்கள். மற்றவற்றைக் கட்டிப் போடுகிறார்கள். பல இடங்களில் குப்பைக்கூடையில் போட்டு விடுகிறார்கள். அவர்களை, இலக்கியத்தின் உயர்வு தெரியாதவர்கள் என்று கூறுவதைவிட மனித உணர்ச்சியற்றவர்கள் உள்ளத்துடிப்பை உணராதவர்கள் என்று கூறுவதுதான் பொருந்தும்.

புது எழுத்தாளர்கள் பலருக்குத் தம் கட்டுரை திருப்பியனுப்பப் பெறுவதைக் கண்டால் ஆசிரியர் மீது உடனடியாக வெறுப்பேற்படுவது இயற்கை. மாறாகக் குப்பைத் தொட்டியில் போடப்பட்டதென்று கேள்விப்பட்டால் அவர் உள்ளம் எவ்வளவு பாடுபடும்! இதை யுணராதவர்கள் நடத்தும் பத்திரிகைகள், மக்களிடையில் வேண்டுமானால் நிலையாமை மனப்பான்மையைப் பரப்பலாம். உயர்ந்த நோக்கங்களைப் பரப்பும் என்று எதிர்பார்ப்பது குள்ள நரியிடம் மனிதத் தன்மையை எதிர்பார்ப்பது போன்றதேயாகும்.


முதலாவதாக, எழுத்தாளர்கள் கட்டுரைகள் ஏன் திருப்பியனுப்பப்படுகின்றன என்பதைச் சிந்தித்து அறியவேண்டும். தாம் கட்டுரை அனுப்பும் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள் சிலவற்றோடு தம் கட்டுரையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எம்முறையில் அது தகுதியற்றதென்பதைத் தெரிந்துகொண்டு அதை நீக்கி எழுதப் பாடுபடவேண்டும். திருப்பியனுப்பப்பட்டு விட்டதே என்பதற்காகச் சோர்ந்துவிடக் கூடாது.

சில எழுத்தாளர்கள் பத்திரிகையாசிரியரையே "எப்படித் தகுதியில்லை?" என்று எழுதிக் கேட்டு விடுகிறார்கள். 'நன்றாயில்லை' என்றோ, 'நன்றாயிருக்கிறது' என்றோ தான் ஒரு ஆசிரியர் முடிவு கூற முடியும். விளக்கிக்கொண்டிருக்க எந்த ஆசிரியரும் பெரும்பாலும் விரும்புவதில்லை. மேலும் இதைத் தொந்தரவாகக் கருதி வெறுப்படையும் ஆசிரியர்களும் உண்டு.

ஒரு இளம் எழுத்தாளர் திருப்பி வந்த தமது கட்டுரையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது 'சுவரின் மீது அடித்த பந்து திரும்பி வந்தது போலத் தங்களுக்கனுப்பிய என் கட்டுரை என்னை வந்தடைந்தது' என்று எழுதியிருந்தார். இந்த ஒரு வரியில் இருந்த நகைச்சுவையும், இலக்கிய நயமும், அவரு

டைய கட்டுரையில் ஒரு இடத்தில் கூட அமைந்திருக்கவில்லை.

அவருடைய கடிதத்தில் 'இலக்கிய மேதை' வெளிப்படுமளவுகூட கட்டுரையில் இல்லை.



பட்டிக்காட்டு நாய்:

என்னடி, உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கே!

பட்டணத்து நாய்:

அட, பட்டிக்காட்டு புருட்! தாலியில்லையடி அது, முனிசிபாலிடி லைசென்ஸ்.

காரணமென்ன? அவர் கட்டுரை எழுதும்பொழுது, இயற்கை நிலையிலிருந்து மாறிக் கொள்ளுகிறார். ஏதேதோ செயற்கையாக இணைத்துச் சேர்த்துக் கட்டுரையாக்கியனுப்பியிருக்கிறார். அது ஆசிரியர்க்குப் பிடிக்கவில்லை. இது மாதிரி, ஒவ்வொரு குறையையும் சிந்தித்துக் கண்டுபிடிக்கவேண்டும். சிலருடைய நடை நன்றாயிருக்காது. பலருக்குக் கதை அமைக்கவே தெரிவதில்லை. ஒரு சிலர் அளவுக்குமீறிப் பிறமொழியைக் கலந்து மொழிவளத்தைக் கெடுத்துவிடுகிறார்கள். இன்னுஞ் சிலர், தங்கள் முதல் முயற்சியில் உருவான கட்டுரை, கதைகளையே அப்படியே அனுப்பிவிடுகிறார்கள். அதில் உணர்ச்சி வெளிப்படும் அளவுக்கு உண்மை புலப்படுவதில்லை. போதாக்குறைக்குச் சிலர் 'இது என் கன்னி முயற்சி' என்று கடிதங்கள்வேறு எழுதிவிடுவதால், ஆசிரியர்களுக்கு, அதைப் படிக்கவே ஓடுவதில்லை.

கட்டுரை திருப்பியனுப்பப்பெற்றது கண்டு கொதித்த ஒரு தோழர், ஆசிரியர், இளம் எழுத்தாளர்களை முன்னேற விடாமல் தடுப்பதாகக் குறைகூறிக் காரசாரமாகக் கடிதம் எழுதியிருந்தார். அவரையொன்று கேட்க விரும்புகிறேன்.

“தவறுகள்மலிந்த கட்டுரையைப் படிக்க மக்கள் விரும்புவரா? அன்றித் தவறிப்படித்தவர்கள்தான் உம்மைப்போற்றுவரா? தூற்றுவரா?”

எனவே தகுதியற்றதென்று கண்டால் தகுதிபெற முயலவேண்டுமேயன்றிப் பிறரைக் காய்வதில் பயனில்லை என்று கூறிமுடித்துக் கொள்ளுகிறேன். அடுத்த கட்டுரையில் காதல்கதைகளைப்பற்றிய என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.